பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 13 சனிக்கிழமை 28.11.2020 கதிர் 23

### இனி இது ரகசியம் அல்ல!

கற்றவர்களிடையேயான அரசியல் முரண்பாடுகளும் எப்போதும் ஆரோக்கியமாகவே இருக்கும். அப்படியான ஒரு சம்பவம் பற்றிய தகவலை இன்று உங்களுடன் பகிரப் போகின்றேன்.

அதற்கு முதல் ஒரு சின்னத் தகவல். வடக்கு பக்கம் 02 »

### அரச படைகளின் பலத்த கெடுபிடிகளுக்கு மத்தியிலும்

## தமிழர் தாயகத்தில் வீடுகளில் நேற்று மாவீரர் நினைவேந்தல் ஈகச் சுடர்கள்!



தமிழர்களின் உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தில் இறுதி வரைப் போராடி வீரச்சாவடைந்த வீரமறவர்களை நினைவுகூரும் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு நேற்று தாயகத்தில் வீடுகளில் நடைபெற்றன.

பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் புலனாய்வாளர்கள் என அரச படைகளின் பலத்த கெடுபிடிகளுக்கு மத்தியில் வீடுகளில் நேற்று மாலை 06.07 மணிக்கு ஈகச்சுடர்களை ஏற்றி மாவீரர்களைத் தமிழ் மக்கள் அஞ்சலித்தார்கள்.

வடக்கு, கிழக்கிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள், நினைவுத் தூபிகள் 02 »

## திருமலை விபத்தில் இருவர் படுகாயம்



திருகோணமலை - கன்னியா வீதியில் உயர்தொழில் நுட்ப கல்லூரிக்கு முன்னால் நேற்றுப் பகல் 02 »

# மாவீரர் தினத்தன்று மஹிந்தவுடன் அஜித் டோவால் முக்கிய சந்திப்பு

### இலங்கை – இந்திய இராஜதந்திரத் தொடர்புகள் குறித்துப் பேச்சு



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பு 07, விஜேராமவில் உள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது

இதன்போது இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்த்துச் செய்தியை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் அஜித் டோவால் வழங்கியுள்ளார். 02 »

## கொரோனாவால் மேலும் 8 பேர் பலி மொத்த உயிரிழப்பு 107 ஆக உயர்வு

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

நான்கு ஆண்களும், நான்கு பெண்களுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இதன்படி இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 107 ஆக அதிகரித்துள்ளது.

## மேலும் 473 பேருக்கு கொரோனா உறுதி!

இலங்கையில் நேற்றும் 473 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரை 18 ஆயிரத்து 960 02 »

## எண்ணெய் விளக்கில் மட்டும் இயங்கிய வலிகாமம் கிழக்கு தவிசாளர் அலுவலகம்



வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசா ளர் அலுவலகம் நேற்று மின்குமிழ்கள் அணைக்கப்பட்ட நிலையில் எண்ணை விளக்கில் இயங்கியது.

இது தொடர்பில் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரி விக்கையில்,

இம்முறை மாவீரர்களைப பொது இடங்களில் நினைவுகூருவதை நீதிமன்றம் தடைசெய்துள்ளது.

நீதிமன்றத் தீர்ப்பை மீறுவது சட்டப்படி குற்றம். தவிசாளரான 02 »

## தீப்பந்தங்கள் அலங்கரித்து மாவீரர்களை நினைவேந்த முற்பட்ட அருட்தந்தை கைது




(எஸ்.நிதர்ஷன்)

மாவீரர் நினைவேந்தல் நாளான நேற்று யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்துக்கு அருகிலுள்ள புனித மருத்தினார் குருபீடத்துக்கு முன்பாக மாவீரர்களுக்கு ஈகச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்த முற்பட்ட அருட்தந்தை ஒருவர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டார்.

மாவீரர் நாள் நினைவேந்தல்களைப் பொது இடங்களிலும் கூட்டங்கள் கூட்டியும் 02 »

## கடும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் முல்லைத்தீவில் உணர்வுபூர்வ அஞ்சலி



முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தினர், பொலிஸார், புலனாய்வாளர்கள் ஆகியோரின் கடுமையான அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மக்களால் மிகவும் உணர்வுபூர்வமாக மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டது. 02 »

### ஒரு லட்சம் பேருக்கு காணி வழங்கும் திட்டத்துக்கு

## யாழ்.மாவட்டத்திலிருந்து மட்டும் ஒரு லட்சம் பேர் விண்ணப்பிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

ஒரு லட்சம் பேருக்கு காணி வழங்கும் அரசின் திட்டத்திற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து மட்டும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு 02 »



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாகாண சபையின் முதலாவது முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன். இப்போது அவர் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர். வித்தியாசமான நடத்தை கொண்டவர். நேரத்துடன் - இரவு 9, 10 மணிக்கே படுக்கைக்குப் போய்விடுவார். அதிகாலை ஒன்று அல்லது ஒன்றரை மணிக்கு எழுந்து கணினியுடன் தனது கடமையைத் தொடங்கிவிடுவார். எங்கள் பத்திரிகை தொடர்பான எதிர்வினையை, அதிகாலை இரண்டு மணிக்கு முன்னர் எங்கள் இலத்திரனியல் பிரதி வெளியாகி சில நிமிடத் துளிகளில் அவரிடமிந்து சில சமயங்களில் நாம் பெற்றிருக்கிறோம்.

இனி விடயத்துக்கு வருவோம். சட்டத்துறையில் ஆசானாகவும் பணியாற்றிய நீதியரசர் விக்னேஸ்வரனின் மாணவர்களில் ஒருவர் இன்று கொடி கட்டிப் பறக்கும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனின். இருவரும் அரசியலில் கீரியும் பாம்பும் போல நல்லுறவு கொண்டவர்கள். ஆனால் தங்களுக்குள் குரு - சிஷ்ய மரியாதை கொஞ்சமும் பிசிறாமல் - பிசகாமல் - பேணும் உயர் பண்பும் நாகரிகமும் கொண்டவர்கள்.

அரசியலில் இருவரும் சுட்ட மண், இனி ஒட்டமாட்டார்கள் என்றுதான் நாம் எண்ணிக்கொண்டிருக்கின்றோம். ஆனால் சில சமயங்களில் சுட்டமண் கூட ஒட்டிவிட முடியும். அப்படி ஒரு சம்பவம் இருவருக்கும் இடையில் ஓரிரு தினத்துக்கு முன்னர் நடைபெற்றுள்ளது.

விடயம் என்னவோ இரண்டு பேரின் தனிப்பட்ட ஊடாட்டம் தொடர்பானது. ஆனால் தமிழர் அரசியலில் இருவருமே முக்கியஸ்தர்கள் - பிரபலங்கள் - என்பதால் சில சமயங்களில் தனிப்பட்ட விடயங்களிலும் ஒற்றாடல் செய்து வெளியிடுவதில் ஒரு முக்கியத்துவம் உண்டு என நினைத்து உள்நுழைந்து விடயத்தைச் செய்தியாக்குகிறேன். இருவரும் தம் தனிப்பட்ட ஊடாட்டத்தை அம்பலப்படுத்தும் மூன்றாம் தரப் பண்பியல்பாக இதனைக் கருதமாட்டார்கள் என்ற உரிமையுடன் வாசர்களாகிய உங்களுடன் அதனைப் பகிர்கின்றேன்.

சில தினங்களுக்கு முன்னர் அரசுக்கு எதிராகக் காட்டமான உரை ஒன்றை நாடாளுமன்றில் ஆற்றினார் சுமந்திரன். சுமார் 21 நிமிட நேர உரை. முதலில் ஜெனிவா விடயங்களை அதில் பேசிய சுமந்திரன், சர்வதேசத்துக்கு அளித்த வாக்குறுதிகள் மற்றும் கடப்பாட்டை இலங்கை நிறைவு செய்யத் தவறினால் விளையக் கூடிய விபரீதங்களை அரசுக்கு எச்சரிக்கையாக முன்வைத்தார். பின்னர் மாவீரர் நினைவேந்தல் குறித்தும், அதற்குத் தமிழர்களுக்கு உள்ள உரிமை குறித்தும், தமிழர்கள் ஒரு மக்கள் கூட்டத்தினர் என்ற முறையில் அவர்களுக்குள்ள தனித்துவ இறைமை குறித்தெல்லாம் விவரித்தார். அண்மைக்காலத்தில் சுமந்திரன் ஆற்றிய மிக ஆக்ரோசமான உரையாக அது அமைந்தது.

அந்த உரை ஆற்றிய சமயத்தில் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் சபையில் இருக்கவில்லைப் போலும். ஆனால் அந்த உரை யூ டியூப்பில் எல்லா இடங்களிலும் வலம் வந்தது. அடுத்த நாள் விடிகாலையில் அதனை செவிமடுத்திருப்பார் நீதியரசர் விக்னேஸ்வரன் என்று நினைக்கிறேன். வழக்கமாகத் தமது மனதில் பட்டதை சமய, சந்தர்ப்பம் பார்க்காமல் பட்டவர்த்தனமாக எடுத்துரைக்கும் நீதியரசர் இந்த உரை தொடர்பிலும் தம் மனதில் பட்டதை அப்படியே வெளிப்படுத்தத் தவறவில்லை.

விடிகாலை 1.43 மணிக்கு சுமந்திரனின் மின்னஞ்சல் முகவரிக்கு நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனிடம் இருந்து ஆங்கிலத்தில் ஒரு சிறு குறிப்பு வந்தது.

*"கொன்கிராஜுலேஸ்ன்ஸ். இந்த உரையை ஆற்றுபவர் ரி.என்.ஏ. (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) உறுப்பினர் அல்லர், ரி.எம்.கே. (தமிழ் மக்கள் கூட்டணி) உறுப்பினரோ என்று ஒரு கணம் நான் குழம்பிப் போனேன்."* - என்ற சாரப்பட அந்தக் குறிப்பு அமைந்தது.

காலையில் அந்தச் செய்தியைப் பார்வையிட்ட சுமந்திரன், தன் சட்டத்துறை குருவுக்கு பதில் அனுப்பினார்.

*"மனம் நிறைந்த நன்றி. வித்தியாசம் நீங்க (வேறுபாடுகள் மறைய) வேண்டும் என விரும்புகிறேன்."* - என்று அது அமைந்தது.

சுமந்திரன் குறிப்பிட்ட 'நீங்க வேண்டிய வித்தியாசம் (வேறுபாடு)' எது?

ரி.என்.ஏ. உறுப்பினரா அல்லது ரி.எம்.ஏ.உறுப்பினரா என்ற குழப்பமா? அல்லது இரண்டு தரப்புகளுக்கும் இடையிலான கருத்து வேறுபாடா?

"Differences should disappear'என்று சுமந்திரன் குறிப்பிட்டது இரு தரப்பு கருத்து வேறுபாடு பற்றியதே என்றால் எவ்வளவு நல்லதாக இருக்கும் என்று எனக்குத் தோன்றியது.

அதுதான், பெரும்பாலான வாசர்களின் கருத்தாகவும் இருக்கும் என்றும் நான் நினைக்கிறேன். அப்படித்தானே வாசகர்களே...?

– மின்னல் –

## மாவீரர் தினத்தன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதனைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திரத் தொடர்புகள் குறித்தும், தற்போது முகம்கொடுத்துள்ள கொரோனாத் தொற்று நிலைமை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது, கொரோனத் தொற்று நிலைமைக்கு மத்தியில் இப்பிராந்தியத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் மற்றும் அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கும் மூலோபாயங்களைக் கண்டறியவேண்டும்என்றுஅஜித்டோவால் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான மூலோபாய பொறிமுறையொன்றை உருவாக்குவதற்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை முன்னிலை வகிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டமையுடன், அதற்கு இந்திய அரசின் முழுமையான ஆதரவைப் பெற்றுத் தருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதன்போது, இந்திய அரசின் நிதி உதவியின் கீழ் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பிரதேசங்களில் வீடமைப்புத் திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அத்தகைய வீடமைப்புத் திட்டங்களைத் தென் பகுதிகளை மையமாகக் கொண்டு ஆரம்பிப்பதற்கும் ஆதரவைப் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டார்.

அதற்குப் பதிலளித்த அஜித் டோவால், இந்த விடயத்தில் இந்திய அரசின் ஒத்துழைப்பைப் பெற்றுத் தருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வழிகாட்டலின் கீழ் நவீன தொழில்நுட்பத்தை உபயோகப்படுத்தி இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுக்கும் திட்டம் தொடர்பில் கவனம் செலுத்தி, அந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலங்கையில் நீர் வழங்கல் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு இந்தச் சந்திப்பின்போது உடன்பாடு எட்டப்பட்டது என்று பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவும் கலந்துகொண்டிருந்தார்.

கொழும்பில் நடைபெறும் இலங்கை, இந்தியா மற்றும் மாலைதீவு நாடுகளுக்கு இடையிலான கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்துகொள் வதற்காகவே அஜித் டோவல் இலங்கை வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருமலை விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

டிப்பர் வாகனமும் ஓட்டோவும் நேர் நேர் மோதி விபத்துக்குளாகின.

இதில் ஓட்டோவில் பயணித்த இருவர் படுகாயமடைந்தனர். அவர்களின்நிலைமை கவலைக்கிடம் என தெரிய வந்துள்ளது.

## எண்ணெய் விளக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனக்கு எதிராக மாவீரர் நாள் பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ள்ளார் என்ற புலனாய்வு அறிக்கையைக் கொண்டு மல்லாகம் நீதிமன்றிலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்பிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதுடன் அடுத்த தவணையில் பொலிஸாரினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்தநிலையில் நீதிமன்றத் தீர்ப்புக்கும் அறிவுறுத்தலுக்கும் மதிப்பளித்து பொது இடத்தில் பிரதேச சபை உறுப்பினர்களுடன் வழமை போன்று நினைவேந்தலை நான் மேற்கொள்ளவில்லை.

இதேவேளை, எமது பிரதேசத்தில் உள்ள 75 ஆயிரத்து 334 பிரஜைகளுக்கும் நான் முதற் பிரஜை என்ற வகையில் எனது அலுவலக அறையின் மின்குமிழ்களை அணைத்துவிட்டு எண்ணெய் விளக்கில் எனது அலுவலகக் கடமைகளை ஆற்றினேன்.

மேலும், எமது கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த செந்தூரன் என்ற மாணவன் 5 ஆண்டுகளுக்கு முன் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகத் தன்னை மாய்த்துக் கொண்டார்.

அவரது இழப்பை மனம் ஏற்றுக்கொள்ளாத போதும் உயிர்நீத்த நிலையில் அவரின் ஆன்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றேன் - என்றார்.

## மேலும் 473 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேர் பாதிப் படைந்துள்ளனர்.

இதையடுத்து மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 22 ஆயிரத்து 501 ஆக அதிகரித் துள்ளது. இவர்களில் 16 ஆயிரத்து 226 பேர் குணமடைந்துள்ளனர். 6 ஆயிரத்து 168 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## தீப்பந்தங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடாத்துவதற்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்தநிலையில், இளவாலையைச் சேர்ந்தவரும் புனித மருத்தினார் குருபீடத்தின் முதல்வருமான அருட்தந்தை பாஸ்கரன் நேற்று மாலை யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

தீப்பந்தங்கள் அலங்கரித்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்குத் தயாராகிய நிலையில் அவர் கைதுசெய்யப்பட்டார்.

அருட்தந்தை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு எதிராக இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 120ஆம் பிரிவின் கீழ் வெறுப்பைத் தூண்டுதல் அல்லது எத்தனித்தல் என்ற வியாக்கியனத்தின் கீழ் குற்றச்சாட்டை முன்வைத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முற்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## யாழ்.மாவட்டத்திலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒரு லட்சம் பேருக்கு காணி வழங்கும் திட்டமொனறை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. அதற்கு அமைவாக மக்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு இருந்தன.

இதனடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்திலுளள பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இதற்கான விண்ணப்பங்கள் மக்களிடமிருந்து பேறப்பட்டிருக்கின்றன.

இதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்று இருக்கின்றன. குறிப்பாக நல்லூர்,சாவகச்சேரி, கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவில் இருந்து அதிகளவான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்று இருக்கின்றன. எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கடும் அச்சுறுத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)





பொது இடங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல் செய்யவோ அல்லது ஒன்றுகூடி நினைவேந்தல் நடத்தவோ முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 46 பேருக்கும் அவர்கள் சார்ந்தவர்களுக்கும் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் மிகவும் அச்சமான சூழலில் பொதுமக்களால் தமது பிள்ளைகளான மாவீரர்களுக்குத் தத்தமது வீடுகளுக்குள்ளும், வீட்டு வாசல்களிலும் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தபட்டுள்ளது.

மாலை 6.07 மணிக்கு உயிரிழந்த மாவீரர்கள் நினைவாக சுடர்கள் ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஆயுதம் தாங்கிய இராணுவத்தினரின் ரோந்துகள், விசேட மோட்டார் சைக்கிள் இராணுவ அணியினரின் ரோந்துகள், பொலிஸார், கடற்படையினர், இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் தேசிய புலனாய்வுப் பிரிவினர் வீதிகள் தோறும் குவிக்கப்பட்டு வீதியால் சென்று வருபவர்களின் விபரங்கள் திரட்டபட்டு மோசமான பாதுகாப்புக் கெடுபிடிகள் காணப்பட்ட போதிலும் மக்கள் தமது வீடுகளுக்குள்ளும், வீட்டு வாசல்களிலும் மாவீரர்களுக்குச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

முல்லைத்தீவு நகர் மற்றும் புதுக்குடியிருப்பு நகரங்களில் கடைகள் அனைத்தும் திறக்காத வர்த்தகர்கள் கடைகளை மூடி வீடுகளில் இருந்து மாவீரர்களை அஞ்சலிக்கத் தயாரான நிலையில் இராணுவம் மற்றும் பொலிஸார் வர்த்தக நிலைய உரிமையாளர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டும், நேரடியாகச் சென்றும் மிரட்டி உடனடியாகக் கடைகளைத் திறக்குமாறு வற்புறுத்தி அச்சுறுத்தல் விடுத்ததனர். எனினும், வர்த்தக நிலையங்கள் அச்சுறுத்தலுக்கு அடிபணியாது மூடப்பட்டிருந்தன.

செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்திய இராணுவத்தினர் அவர்களின் விபரங்களையும் திரட்டினர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களைச் சூழ நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும், பொலிஸாரும் நேற்று குவிக்கப்பட்டிருந்தனர்.

## தமிழர் தாயகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் பொது இடங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த இம்முறை நீதிமன்றங்கள் தடை உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தமையால் தமிழ் மக்கள் தத்தமது வீடுகளில் மாவீரர்களை நேற்று நினைவுகூர்ந்தார்கள்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் அழைப்பின் பிரகாரம் வீடுகளில் இம்முறை மாவீரர் நாள் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

மாவீரர் நாளையொட்டி தமிழர் தாயகத்தின் மூலைமுடுக்கெல்லாம் ஆயுதம் தாங்கிய அரச படைகள் மக்களை அச்சுறுத்தும் வகையில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். எனினும், மக்கள் தத்தமது வீடுகளில் துணிவுடன் மாவீரர்களை நினைவேந்தினார்கள்.

# இது சிங்கள நாடு என்று நினைக்கும் வரைக்கும் இலங்கை அரசு சர்வதேசத்தில் பந்தாடப்படும்!

## கஜேந்திரகுமார் எச்சரிக்கை



இலங்கையில் தமிழர், முஸ்லிம்களின் உரிமைகளை அடையாளம் காணாத வரையில், இது சிங்கள நாடு என நினைத்துக்கொண்டுள்ள வரையில் இலங்கை அரசாங்கம் சர்வதேச அரங்கில் பந்தாடப்பட்டுக்கொண்டே இருக்கும்.

தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை நிராகரித்து செயற்படும் வேளையில் உங்களின் அரசியல் விளையாட்டில் நீங்கள் கண்டிப்பாக சீரழிவீர்கள் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சபையில் அரசாங்கத்தை எச்சரித்தார்.

அமெரிக்கா அரசாங்கத்திற்கு எதிராக அழுத்தங்களைப் பிரயோகித்த காரணத்தால் இலங்கை அரசாங்கம் சீனாவை சார்ந்தது. அதன் விளைவாக இன்று இலங்கைக்கு சுயாதீனமாகத் தீர்மானம் எடுக்க முடியாத அளவிற்கு சீனாவிடம் அடிபணிய வேண்டியுள்ளதாவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் ஊடகம், வெளிவிவகார அமைச்சுகள் மற்றும் பிராந்திய உறவு அலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

பூகோள ரீதியிலும், கேந்திர ரீதியிலும் இலங்கை முக்கியமான இடத்தில் உள்ளதாகவும் ஆகவே இலங்கையை எவரும் கால்பந்தாக நினைத்து பந்தாடக்கூடாது எனவும் ஆளும் கட்சியினர் தெரிவித்தனர். ஆனால் உண்மையில் இதுதான் இலங்கையில் கொள்கையாகக் காணப்படுகின்றது.

கிழக்கின் கடற்படை தளம் ஒரு தரப்பினருக்கும் ஏனைய பக்கம் இன்னொரு தரப்பினருக்கும் என பங்கிடப்பட்டுள்ளது. நீண்ட காலமாக இதுதான் இலங்கையில் இடம்பெற்று வருகின்றது. இலங்கையின் வெளிநாட்டு கொள்கையில் பல மாறுபாடுகள் வரலாறுகளில் காணப்பட்டன. 1948 ஆம் ஆண்டுவரையில் இலங்கையின் வெளிநாட்டு கொள்கையில் இந்தியாவை சந்தேகக் கண்ணோட்டத்தில் பார்ப்பதாக இருந்தது. ஏனென்றால் வடக்கு கிழக்கில் தமிழர்கள் அதிகம் என்பதால் இந்த நிலைமை காணப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாக எதுவுமே சிந்திக்கப்படவில்லை. தமிழ் மக்களின் அரசியல் தீர்வுகள் என்ற விடயம் பேசப்படுகின்ற நேரத்தில் இலங்கை சீனாவின் பக்கம் சாய்ந்தது. அமெரிக்கா போன்ற நாடுகள் அரசாங்கத்துக்கு எதிராக அழுத்தங்களைப் பிரயோகித்த காரணத்தால் இலங்கை அரசாங்கம் சீனாவை சார்ந்தது. அதன் விளைவாக இன்று இலங்கைக்கு சுயாதீனமாகத் தீர்மானம் எடுக்க முடியாத அளவிற்கு சீனாவின் பக்கம் சாய்ந்தது.

இந்த நாட்டின் சகோதர இனத்தின் உரிமைகளை மறந்து ஓர் இனத்தைச் சார்ந்து அரசாங்கம் சிந்திக்க நினைத்தது. ஆனால் இந்த நாட்டில் ஓர் இனம் மட்டும் அல்ல ஏனைய சமூகமும் உள்ளன, ஆனால் இந்த விடயத்தில் குடிகாரர்கள் போல் அரசாங்கம் நடந்துகொண்டது. இந்த நாட்டில் சிங்களவர்கள் போன்று தமிழ் முஸ்லிம்களும் உள்ளனர். ஆனால் அரசாங்கம் அதனைக் கருத்தில் கொள்ளவில்லை. மாறாக இலங்கையின் வளங்களைத் தாரைவார்த்தேனும் தப்பிக்க வேண்டும் என்பதற்காக சீனாவின் பக்கம் சாய்ந்தது. இந்த நாடு சிங்கள நாடு என்பதை மாத்திரமே அரசங்கம் கருத்தில் கொண்டுள்ளது.

இலங்கையில் தமிழர், முஸ்லிம்களின் உரிமைகளை அடையாளம் காணாத வரையில், இது சிங்கள நாடு என நினைத்துக்கொண்டுள்ள வரைக்கும் இலங்கை அரசாங்கம் பந்தாடப்பட்டுக்கொண்டே இருக்கும். அதிகளவில் எதிரிகளை சந்திக்க நேரிடும். இதனால் உங்களின் அரசியல் விளையாட்டில் நீங்கள் கண்டிப்பாக சீரழிவீர்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

நீங்கள் தமிழர்களைப் பாதுகாத்தால் அதன் விளைவுகள் நம் அனைவருக்கும் ஆரோக்கியமனதாக அமையும், மாறாக இப்போது செய்யும் அதே தவறை செய்தால் நிச்சயமாக அதன் விளைவுகள் அரசாங்கத்தை நாசமாக்கும். சீனாவுடன் உறவு வேண்டாம் என நாம் கூறவில்லை. ஆனால் இந்தியாவை, அமெரிக்காவை பகைத்துக்கொள்ள வேண்டாம். இந்த விளையாட்டில் மோசமான தோல்வியைச் சந்திப்பீர்கள் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். – என்றார்.

## இரத்ததானத்துக்கும் தடை!

(ந.லோகதயாளன்)

மாவீரர் நாளின் எதிரொலியாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் இரத்ததான நிகழ்வுகளிற்கும் படையினர் தடை விதித்தனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, தெல்லிப்பளை வைத்தியசாலை மற்றும் பருத்துறை வைத்தியசாலைகளின் இரத்த வங்கிகளில் இரத்த தானம் செய்ய விரும்புபவர்கள் வழமையாக சென்று அங்கே குருதி கொடை செய்வது வழமையாகும்.

இருந்தபோதும் மாவீரர் தின நினைவாக ஆண்டு தோறும் பலர் வழமையாக இந்த இரத்த தானம் செய்வது வழமையாகும் எனத் தெரிவித்து இராணுவத்தினர், புலனாய்வாளர்கள் குறித்த வைத்தியசாலைகளுக்குச் சென்று இரத்த தான நிகழ்வுகள் இடம்பெறக்கூடாது, அவ்வாறு இடம்பெற்றால் நெருக்கடியைச் சந்திப்பீர்கள் என அச்சுறுத்தியுள்ளனர்.

இவ்வாறு விடுத்த அச்சுறுத்தல் காரணமாக நேற்று வைத்தியசாலைகளிற்கு இரத்த தானம் செய்யச் சென்றவர்கள் அனைவரும் திருப்பி விடப்பட்டனர். வைத்தியசாலைகள் இரு நாள்களாகத் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டன.

## முல்லைத்தீவில் மூடப்பட்ட கடைகளை திறக்கும் நடவடிக்கையில் இராணுவம்!

மாவீரர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு நகர் மற்றும் புதுக்குடியிருப்பு நகரில் நேற்று (வெள்ளிக்கிழமை) வணிக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக மக்களால் அனுஷ்டிக்கபட்டது.

இந்நிலையில் மூடப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களை உடனடியாக திறக்குமாறு வலியுறுத்தி, பலவந்தமாக திறக்கும் நடவடிக்கையில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஈடுபட்டனர் என வர்த்தகர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.


மேலும், முல்லைத்தீவு நகரிலுள்ள இஸ்லாமிய சகோதரர்களும் கடைகளைப் பூட்டியே இருந்தனர். முல்லைத்தீவு மாத்திரமின்றி புதுக்குடியிருப்பிலும் விற்பனை நிலையங்களில் பெரும்பாலானவை திறக்கப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் அந்தப் பகுதிகளுக்குச் சென்றுள்ள இராணுவம் மற்றும் பொலிஸார் விற்பனை நிலையங்களின் உரிமையாளர்களை தொடர்புகொண்டும், அந்தப் பகுதியில் நின்றிருந்தவர்களைக் கொண்டும் உடனடியாக விற்பனை நிலையங்களை திறக்குமாறு வலியுறுத்தினர் எனவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

சுயவிருப்பின் பெயரில் கடைகளை பூட்டிய உரிமையாளர்களுக்கு தனி மனித சுதந்திரம்கூட இல்லாத நிலை காணப்படுகின்றதா என வர்த்தகர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும் முல்லைத்தீவு மற்றும் புதுக்குடியிருப்பு நகரங்களில் பூட்டியிருக்கும் கடைகளை இராணுவம் மற்றும் புலனாய்வாளர்கள் புகைப்படம் எடுத்து பதிவுகளையும் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் பொலிஸார் தீவிரக் கண்காணிப்பில்!



வவுனியாவிலும் மாவீரர் தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டமையால், பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 21 ஆம் திகதி முதல் வவுனியாவின் சில பகுதிகளில் பொலிஸாரின் கெடுபிடிகள் காணப்பட்டபோதும் விடுதலைப்புலிகளின் தலைவரின் பிறந்த தினமான நேற்றுமுன்தினமும் நேற்றும் பல பகுதிகளில் மேலதிக பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டமையுடன், கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக வவுனியாவில் 1379 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபடும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்ட இடம், பொங்கு தமிழ் நினைவுத் தூபி, தோணிக்கல் பகுதியில் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள அரவிந்தன் என்பவரின் வர்த்தக நிலையத்துக்கு முன் மற்றும் ஆலயங்கள், ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தை அண்டிய பகுதிகள் என பரவலாக பொலிஸாரின் பிரசன்னம் அதிகரித்தமையுடன், அந்தப் பகுதிகளுக்கு வந்து செல்வோர் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டனர் புலனாய்வாளர்களின் பிரசன்னமும் அதிகரித்துக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்



திருமதி

### கிளாரன்ஸ் புஸ்பராணி அருளானந்தன்

ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியையும் தாயகத்தில் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான திருமதி கிளாரன்ஸ் புஸ்பராணி அருளானந்தம் அவர்கள் 26.11.2020 அன்று இறைவனின் ஆசியில் தமது 85 ஆவது வயதில் நிறைவான உறக்கத்தை அடைந்தார்.

இவர் ஓய்வுபெற்ற வைத்தியர் அமரர் டொக்டர் அருளானந்தன் (உடுப்பிட்டி ) அவர்களின் அன்புத் துணைவியாரும், வில்லியம்ஸ் (சிட்னி), ரவீந்திரன் (சிட்னி), ஏஞ்சலா நிர்மலினி போல் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத்தாயாரும், அருந்தா ,சாந்தினி, றொஹான் ஆகியோரின் அருமை மாமியாரும், அமி, சாரா, விஷ்னி, கோபிகன், நவீன், தனிஷா ஆகியோரின் ஆசை மிகு பேத்தியாரும் ஆவார்.

அவரின் இறுதி ஆராதனையும் அதனைத் தொடர்ந்து சிறு விருந்தும் இம்மாதம் 28 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு Camelia Chapel - Macquarie Park Crematorium, Corner of Delihi Road and Plassey Road, Macquarine Park இல் இடம்பெறும்

பங்குபற்ற வருபவர்கள், தற்போதைய சுகாதார நிலைமைகளால் ஆக்கக்கூடியவர்கள் நூறு பேரே அஞ்சலி மண்டபத்தில் ஒரே வேளையில் அனுமதிக்கப்படுவதால் அவரது பிள்ளைகளிடம் தங்கள் வருகையை முன் கூட்டி அறிவிக்கும்படி கேட்கப்படுகின்றனர் .

மேலதிக விபரங்களுக்கு - https://nmclm.com.au

ரவி அருளானந்தன்
samuelravi.arulgmail.com
0061412160370

தகவல்: - எம்.வரதராஜன் - நியூசீலாந்து

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## அத்தியாவசியப் பொருளுக்கு வரி; அடாவடித்தனமான அரசியல் இது!

'அடி மடியில் கைவைப்பது' என்பார்கள். அப்படிப்பட்ட ஒரு விவகாரம் தொடர்பில் முகப்புத்தகம் கணக்கு ஒன்றில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

'ஓடுற இடத்தில் ஓடவிட்டிட்டு, ஒழுகிற இடத்தால் மிச்சம் பிடிப்பது', என்பது இதைத்தான் பாருங்கோ – என்ற முகமனுடன் அந்தக் குறிப்பு பதியப்பட்டிருந்தது.

அனைத்து வயதினருக்குமான 'சானிட்டரி நப்கின்' (மாதவிடாய் துவாய்) மீதான வரியை இந்த வரவு – செலவுத்திட்டத்தில் பதினைந்து வீதத்தால் அதிகரிக்கும் நிதி அமைச்சரின் முடிவின் மீதான சீற்றத்தால் இப்படிக் குறிப்பிட்டிருந்தார் அந்த முகப்புத்தகக் கணக்குக்குச் சொந்தக்காரியான இளம்பெண்.

இது பெண்களுக்கான பிரச்சினை மட்டுமல்ல. பெரும்பாலும் சிறு குழந்தைகளுக்கு அணிவிக்கும் சுகாதாரத் துணிக்கும் இந்த விலை அதிகரிப்புப் பொருந்தும். சுகவீனமுற்றிருக்கும் வயோதிபர்கள் – குறிப்பாக அடிக்கடி சிறுநீர் தம்மை அறியாமலேயே கழிக்கும் சிக்கல் கொண்ட வயோதிபர்கள் கூடப் பயன்படுத்தும் ஓர் அத்தியாவசியப் பொருள் இது.

இது ஓர் ஆடம்பரப் பொருள் அல்ல, அத்தியாவசியப் பாவனைப் பொருள் என்பது நிதி அமைச்சருக்குப் புரியவில்லையோ என்னவோ....!

இந்தக் கொரோனாத் தொற்றுக் காலத்தில் பொதுமக்கள் அதிகம் இயற்கை கிருமிநாசினியாகப் பயன்படுத்தும் மஞ்சளுக்குக் கெடுபிடி கொண்டு வந்திருக்கின்றது அரசு. உள்ளூரில் மஞ்சள் உற்பத்தியை அதிகரிப்பதாகத் தெரிவித்து மஞ்சள் இறக்குமதிக்குத் தடை விதித்தது அரசு. அதனால் சமயலறையில் சொதிக்குப் போடுவதற்குக் கூட மஞ்சள் இல்லை என்று அங்கலாய்த்திருக்கின்றார் ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ரோஹினி கவிரத்ன.

மஞ்சளுக்கு ஏற்பட்ட அதே கதிதான் மாதர் பயன்படுத்தும் மாத விடாய்த் துவாய்க்கும் ஏற்படும் என்று எச்சரித்திருக்கின்றார் அவர். பெண்ணின் பிரச்சினைகள் பெண்ணுக்கே புரியும் என்பதால் அப்படி விடயத்தைப் புரிந்து நாடாளுமன்றத்தில் போட்டுடைத்திருக்கின்றார் அவர்.

இவ்விடயத்தில் ரோஹினி கவிரத்ன எம்.பி. சுட்டிக்காட்டும் சில புள்ளி விவரங்கள் நோக்கப்பட வேண்டியவை.

மாத விடாய்த் துவாய்களுக்கு 51 சதவீதம் வரி அறவிடும் இந்த அரசாங்கம் அதன் மூலம் சிறுவர்கள், குழந்தைகள், முதியோர், விசேட தேவையுடையோரின் மலசலம் கழிக்கும் உரிமைக்கும் வரி அறவிடும் அரசாங்கமாக மாறியிருக்கின்றது என்று அவர் சுட்டுவது மறுக்கப்பட முடியாத யதார்த்தமாகவே உள்ளது.

மாதவிடாய்த் துவாய்க்கான வரி 2018 இல் 101.2 வீதமாகக் காணப்பட்டது. முன்னைய நல்லாட்சி அரசு அதனை முதலில் நாற்பது வீதத்தினாலும், பின்னர் பத்து வீதத்தினாலும் குறைத்து, வரி விதிப்பை அரைவாசிக்குக் கீழ் கொண்டு வந்தது.

ஆனால் இப்போதைய அரசோ தீர்வை வரிக்கும் அப்பால் 15 வீத வரி, முப்பது சத வீத சுங்கவரி, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான இரண்டு வீத வரி என்று மொத்தம் 51 சத வீத வரியை அறவிடுகின்றது.

இந்த விடயத்தில் சில விவரங்களைப் பொது வெளியில் பேசுவதற்குப் பலரும் பின்னடிக்கும் நிலையில் ரோஹினி கவிரத்ன சில உண்மைகளை அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இலங்கையில் 32 வீதமான பெண்களே மாதவிடாய்த் துவாயைப் பயன்படுத்துகின்றனர். ஏனைய அனைவரும் சுகாதாரமற்ற, பழைய முறையிலான, பாதுகாப்பற்ற வழிமுறைகளையே நாடுகின்றனர் என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

தாம் பல வருடங்கள் ஆசிரியையாகக் கடமையாற்றியிருக்கின்றார் என்று தெரிவித்துள்ள அவர், ஐம்பது முதல் அறுபது சதவீதமான பெண்பிள்ளைகள் மாதவிடாய்க் காலங்களில் பாடசாலைகளுக்கு வருவதில்லை, காரணம் மாத விடாய்த் துவாய் வாங்கும் அளவுக்கான பொருளாதார நிலைமை இவர்களின் பெற்றோருக்கு இல்லை என்று விசனத்துடன் சுட்டுகின்றார்.

எமக்கு சுகாதாரப் பாதுகாப்பை விட தேசியப் பாதுகாப்பே முக்கியம் எனக் கூறும் கொழும்பு – 07 இல் வசிக்கும் ராணிகளுக்கு இந்த விடயங்கள் தெரிவதில்லை. கிராமத்தில் துன்பப்படும் பெண்களுக்குத்தான் அந்த வேதனை புரியும் என்றும் அவர் கவலை தெரிவித்திருக்கின்றார்.

அவரது கூற்று முற்றிலும் உண்மை. சுகாதார அமைச்சராக ஒரு பெண்மணி இருக்கும்போதுதான் பெண்களின் இந்தப் பிரச்சினை புரியாமல் இந்தப் பொருளுக்கு வரி அதிகம் விதிக்கப்பட்டிருக்கின்றது.

உண்மையில் மகளிரின் அடிப்படைப் பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்ட விவகாரம் இது. அரசும், அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் சிரத்தை எடுத்துக் கையாள வேண்டிய விடயம்.

உண்மையில் மானிய விலையில் தாராளமாக மகளிருக்குக் கட்டாயம் வழங்க வேண்டிய அத்தியாவசியப் பொருளுக்கு அளவுக்கு அதிகமான வரி விதித்து அடாவடித்தனம் பண்ணுகின்றது அரசு. இது சகல தரப்பினராலும் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

# 200 ஏக்கர் நிலத்தில் தொழில் பேட்டை மட்டக்களப்பில் பலருக்கு தொழில் வாய்ப்பு

## ஏற்பாடுகளை மேற்கொள்கிறார் வியாழேந்திரன்



மட்டக்களப்பு மாவட்டத்தில் 200 ஏக்கர் நிலத்தில் தொழில் பேட்டை ஒன்றை அமைத்து ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் கமத்தொழில், நீர்ப் பாசன அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

கடந்த அரசாங்கம் வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு எந்த வேலைத்திட்டத்தையும் மேற்கொள்ளவில்லை. ஆனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான எமது அரசாங்கத்தில் பிரதமரினால் முன்வைக்கப்பட்டிருக்கும் வரவு செலவு திட்டத்தில் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று கடந்த காலங்களிலும் எமது அரசாங்கமே வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் என்ற வேலைத்திட்டங்களால் பல அபிவிருத்திகளை வடக்கு – கிழக்கு பிரதேசங்களுக்கு மேற்கொண்டன.

அத்துடன் ஏப்ரல் தாக்குதல் மற்றும் கொரோனாத்தொற்று போன்ற காரணங்களால் உலக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருக்கின்றன. எமது பொருளாதாரமும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறான நிலையிலும் மிகவும் நெருக்கடிக்கு மத்தியில் சிறந்ததொரு வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. எனது அமைச்சு கமத்தொழில் அமைச்சுக்கு கீழே இருக்கின்றது. எனது அமைச்சின் கீழும் விவசாய வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்திருக்கின்றோம்.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 200 ஏக்கர் நிலத்தில் 4 இற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளைக்கொண்டுவந்து தொழில் பேட்டை ஒன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம். அதற்கான அமைச்சரவை அனுமதியும் கிடைத்திருக்கின்றது. இதன் மூலம் ஆயிரக்கணக்கானவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும்.

கடந்த அரசாங்கம் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஒரு தொழிற்சாலையையேனும் திறக்கவில்லை. வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையில் ஆயிரம் பேர்வரை தொழில் புரிந்துவந்தனர். அதனைக்கூட அவர்களால் மீள ஆரம்பிக்க முடியாமற்போனது. ஆனால் எமது அரசாங்கம் அதனை ஆரம்பித்திருக்கின்றது.– என்றார்.

# காட்டு விலங்குகளுக்காக வைத்த மின்சாரத்தில் சிக்கி இளைஞர் சாவு!

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

செட்டிகுளம், காந்தி நகர் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

வவுனியா, செட்டிகுளம், காந்தி நகர் பகுதியில் வசிக்கும் நபர் தனது வீட்டுக்கு அருகில் இருந்த தோட்டத்தில் காட்டு விலங்குகளின் பாதுகாப்புக்காக மின்சாரம் பொருத்தியுள்ளார்.

இந்நிலையில் நேற்று மாலை தோட்டத்தில் குரங்குகள் நின்றமையால் அதை விரட்டிச் சென்ற போது தவறுதலாக தோட்ட வேலியில் இருந்த மின்சாரத்தில் அகப்பட்டு மரணமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மின்சாரம் தாக்கி காட்டு யானை பலி!

பொலன்னறுவை வனவிலங்கு பிராந்தியத்துக்கு உட்பட்ட எலஹர வனவிலங்கு சரணாலயத்திற்குச் சொந்தமான காட்டு யானை ஒன்று மின்சார வேலியில் இருந்த மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளது.

கடந்த புதன்கிழமை கரண்ட கொள்ள பகுதியில் உள்ள ஒரு காணியில் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்டுள்ள மின்சார வேலியில் மின்சாரம் தாக்கியதன் காரணமாக அந்தக் காட்டு யானை இறந்துள் ளதாக வனவிலங்கு பிராந்திய அலுவலகம் தெரிவித்துள்ளது.

மனித நடவடிக்கைகள் காரணமாக எலஹர வனவிலங்கு சரணாலயத்தில் ஒரே வாரத்திற்குள் பதிவான இரண்டாவது காட்டு யானையின் மரணம் இது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, பொலன்னறுவை பகுதியில் இந்த ஆண்டில் உயிரிழந்துள்ள 45 ஆவது காட்டு யானை இது என்பதும் குறிப்பிடத்தக்கது.


16 2020

பால்நிலை வன்முறைக்கு எதிரான
16 நாள் செயற்பாடு - 2020
16 Days of Activism Against Gender Based Violence

JSAC

வாழத்துடிக்கும் பெண்களுக்கு
வாழ்வதற்கான உரிமையுண்டு வையகத்தில்
வாழ விடு சமூகமே! விழித்திடு சமூகமே!

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2020
'ஒவ்வொருமரம் நடப்படும் போதும் சமாதானத்துக்கான விதை ஊன்றப்படுகிறது.'
- வங்காரி மாதாய் (அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)

# திட்டமிடல்கள் இல்லாமல் பாடசாலைகள் ஆரம்பிப்பு!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதும் எந்தவித திட்டமிடலும் இல்லை எனவும், அதனால்தான் மாணவர்களின் வருகையும் வீழ்ச்சியடைந்திருக்கின்றது எனவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விசேட கூட்டமொன்றில், பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் தற்போது எதிர்கொண்டுவரும் பிரச்சினைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் பாடசாலைகளை கடந்த 23ஆம் திகதி திறப்பதற்கு கல்வி அமைச்சர் என்ற வகையில் நீங்கள் தீர்மானித்தீர்கள்.

இந்த தீர்மானம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் கடந்த 20ஆம் திகதி மாவட்ட சுகாதார பிரிவு, பொது சுகாதாரத்துறை மற்றும் போக்குவரத்து அதிகாரசபைக்கு, 23 ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்படும்போது, தேவையான சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனத் தெரிவித்து கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டது.

ஆனால், பாடசாலைகளை திறப்பதற்கு எடுத்த கால எல்லைக்குள் பாடசாலைகளில் சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்ய காலம் போதுமானதாக இல்லை.

நாட்டில் இருக்கும் சுமார் 10 ஆயிரம் பாடசாலைகளில் சுமார் 5 ஆயிரம் பாடசாலைகளைத் திறக்கத் தீர்மானித்திருக்கின்றது. அதில் தரம் 6 தொடக்கம் 13 வரை சுமார் 33 லட்சம் மாணவர்கள் இருக்கின்றனர்.

சிரேஷ்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் ஆலோசனைக்கமைய பாடசாலைகளைத் திறக்கத் தீர்மானித்ததாக கல்வி அமைச்சர் என்றவகையில் நீங்கள் தெரிவித்தீர்கள்.

ஆனால் கிளிநொச்சியில் பாடசாலை கட்டமைப்பு முழுமையாக மூடப்பட்டுள்ளது. கண்டி கல்வி வலயத்தில் 45 பாடசாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. குருநாகலையிலும் சில பாடசாலைகள் ஆளுநரின் கோரிக்கைக்கமைய மூடப்பட்டிருக்கின்றன.

அத்துடன் பாடசாலைகளில் தொற்று நீக்கம் செய்வதற்கும் ஏனைய சுகாதார தேவைகளுக்கும் என 100 மாணவர்களுக்கு குறைந்த பாடசாலைகளுக்கு 8 ஆயிரம் ரூபாவும், 200 மாணவர்களுக்கு குறைவான பாடசாலைகளுக்கு 10 ஆயிரம் ரூபாவும், 200 இற்கும் அதிக மாணவர்கள் இருக்கும் பாடசாலைகளுக்கு 12ஆயிரம் ரூபாவும் வழங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தீர்கள்.

ஆனால், ஒருசதமேனும் மேற்படி பாடசாலைகளுக்கு இதுவரை கிடைக்கவில்லை.

அதேபோன்று பாடசாலை சேவைகளை மேற்கொள்ளும் வாகனங்கள் மாணவர்களை இடைவெளியை பேணி ஏற்றிவரவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

வான் ஒன்றில் 20 மாணவர்களை ஏற்றுவதாக இருந்தால், இடைவெளி விட்டு அனுமதிக்கும்போது 10 மாணவர்களை மாத்திரமே அனுமதிக்க முடியும்.

இதனால் தங்களுக்கு ஏற்படும் நஷ்டத்துக்கு நிவாரணம் வழங்கவேண்டும், இல்லாவிட்டால் சேவையில் ஈடுபட முடியாது என வான் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

முறையான திட்டமிடலுடனே இதனை மேற்கொள்ளவேண்டும் என்றே தெரிவிக்கின்றோம். ஏனெனில், டிசெம்பர் 23 ஆம் திகதி மீண்டும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட இருக்கின்றது.

ஜனவரியில் கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை இடம்பெற இருக்கின்றது.

மேல் மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா, களுத்துறையில் பாடசாலை கட்டமைப்பு மூடப்பட்டிருக்கின்றது.

அதனால் மாணவர்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டு முறையான திட்டமிடலுடன் இதனை மேற்கொள்ளுங்கள்.

கல்வி அமைச்சின் செயலாளர் சொன்னதற்காக அவசரப்பட்டு மேற்கொள்ள வேண்டாம். முறையான வேலைத்திட்டம் ஒன்றை அமைத்துக்கொண்டு பாடசாலைகளை திறந்திருக்கலாம். தற்போது பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளபோதும் மாணவர்களின் வருகை மிகவும் குறைவாகவே இருக்கின்றது. – என்றார்.

# பலருடன் ஆராய்ந்ததன் பின்பே பாடசாலைகளை ஆரம்பித்தோம்!

## சஜித்துக்கு பீரிஸ் விளக்கம்



பாடசாலைகளை ஆரம்பிக்கும் தீர்மானத்தை அனைவருடனும் கலந்துரையாடியே பின்னரே மேற்கொண்டேன் கொழும்பில் இருந்து தீர்மானிக்கவில்லை என கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் பாடசாலைகள் எந்த திட்டமிடலும் இல்லாமலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

கொவிட் அச்சுறுத்தல் இல்லாத பிரதேசங்களின் மாணவர்களைத் தொடர்ந்தும் வீடுகளில் முடக்கி வைத்திருக்க முடியாது.

அதனால் மேல் மாகாணம் தவிர்ந்து ஏனைய மாவட்டங்களின் வலய பணிப்பாளர்கள் அதிபர்களுடன் இதுதொடர்பாகக் கலந்துரையாடி பாடசாலைகளை ஆரம்பிக்கத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தேன்.

இதுதொடர்பாக வலய கல்வி பணிப்பாளர்களுடன் நான் தனிப்பட்ட முறையில் கதைத்தேன். அதன் பிரகாரம் 23ஆம் திகதி பாடசாலைகளை ஆரம்பிக்க அதிபர்கள் மற்றும் வலய அதிகாரிகள் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

நாங்கள் கொழும்பில் இருந்துகொண்டு இந்தத் தீர்மானத்தை எடுக்கவில்லை.

அத்துடன் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் ஏதாவது அவசர நிலைமைகள் ஏற்பட்டால் அதுதொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வலயப் பணிப்பாளர்களுக்கு வழங்கியிருந்தோம்.

அதன் பிரகாரமே கண்டி, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் சில பாடசாலைகளைத் தற்காலிகமாக மூடிவிட அங்குள்ள அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

மேலும் பாடசாலைகளின் சுகாதாரப் பாதுகாப்புகளை மேற்கொள்வதற்காக 370 லட்சம் ரூபா ஒதுக்கியிருக்கின்றோம்.

அந்த பணத்திலே வலய கல்வி அதிகாரிகள் பாடசாலைகளின் தேவைக்காக செலவழித்து வருகின்றனர். அதனால் பாடசாலைகளுக்கு பணம் கிடைக்கவில்லை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

அத்துடன் எந்தவொரு வேலையை ஆரம்பிக்கும்போது, அதில் குறைபாடுகள் இருக்கலாம் விமர்சனங்கள் வரலாம்; கொவிட் அச்சுறுத்தலுக்கு மத்தியிலேயே நாங்கள் உயர்தர பரீட்சையை நடத்தினோம்.

இந்த பரீட்சை இரண்டுமுறை பிற்போடப்பட்டிருந்தது. இதனால் மாணவர்கள் பாரியளவில் மனதளவில் பாதிக்கப்பட்டிருந்தனர்.

உயர்தர பரீட்சையை நடத்த தீர்மானிக்கப்பட்டபோது பல விமர்சனங்கள் வந்தன. மிகவும் சவாலான விடயம் என்பது எமக்குத் தெரியும்.

என்றாலும், நடத்தி முடிக்கலாம் என்ற தைரியம் எமக்கு இருந்தது. அனைவரும் இணைந்து செயற்பட்டதால் வெற்றிகரமாக பரீட்சையை நடத்தி முடித்தோம்.

அதனால் தற்போதும் பாடசாலைகளை ஆரம்பிக்கும்போது விமர்சனங்கள் வந்தன. பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட 23 ஆம் திகதி 34 வீதமான மாணவர்களே வருகை தந்திருந்தனர். ஆனால், கடந்த புதன்கிழமை தினம் 51வீதமான மாணவர்கள் வருகை தந்திருந்தனர்.

அதேபோன்று 82 வீதமான ஆசிரியர்கள் வருகை தந்திருந்தனர்.

எனவே, தொடர்ந்தும் பாடசாலைகளை மூடி மாணவர்களை வீடுகளுக்குள் முடக்கிவைத்துக்கொள்ள முடியாது. படிப்படியாக எமது நடவடிக்கைகளை நாங்கள் ஆரம்பித்து செல்லவேண்டும்.

மேல்மாகாணத்தில் தற்போதைக்கு பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு இல்லை. அதனால் அந்த மாணவர்கள் வீடுகளில் இருந்தவாறு கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றோம். – என்றார்.

## சீதுவையில் ஒரு வயதுக் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தில் 6 பேருக்கு கொரோனா!

*சீதுவ, ரத்தொலுகம பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் உட்பட எட்டு பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கட்டுநாயக்க சீதுவை நிர்வாக பொது சுகாதார ஆய்வாளர் சுரேஷ் குமார தெரிவித்தார்.*

*இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளான குடும்பத்தில் ஒரு வயது குழந்தையும் அவரது தாயும் நோய் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுரேஷ் குமார மேலும் தெரிவித்தார்.*

*அத்துடன் கம்பஹா மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 04 மணிவரை முடிவடைந்த 24 மணித்தியாலத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 71 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் இதனையடுத்து, கம்பஹா மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 094 ஆக பதிவாகியுள்ளதாக கம்பஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் மிகார ஏப்பா தெரிவித்தார்.*

*இவ்வாறு பதிவான 71 நோயாளர்களில் 18 பேர் வத்தளை சுகாதார பிரிவிலும், 10 பேர் பியகம சுகாதார பிரிவிலும் பதிவாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.*

*இதேவேளை, நேற்றுமுன்தினம் மாலை வரை கம்பஹா மாவட்டத்தில் 76 ஆயிரத்து 246 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன எனவும் கம்பஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் மிகார ஏப்பா தெரிவித்தார்.*

# விவசாயம் மற்றும் தொழிநுட்ப அறிவை இலங்கைக்கு வழங்கவுள்ளது நெதர்லாந்து

இலங்கையர்களுக்கு விவசாயத்துறை தொடர்பான உயர்கல்வியையும் தொழில்நுட்ப அறிவையும் இலவசமாகப் பெற்றுக்கொடுப்பதற்குத் தயாராக இருப்பதாக இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் ரன்ஜா கொன்கிரிஜ் தெரிவித்திருக்கிறார்.

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவிற்கும் நெதர்லாந்து நாட்டின் தூதுவருக்கும் இடையில் கடந்த வியாழக்கிழமை விவசாயத்துறை அமைச்சில் இடம்பெற்ற விசேட சந்திப்பின்போதே அவர் இவ்வாறு உறுதியளித்தார்.

ஒட்டுமொத்த ஐரோப்பாவிற்கும் பழங்களும் மரக்கறிகளும் நெதர்லாந்திலிருந்தே அனுப்பி வைக்கப்படுகின்றன. அதேபோன்று மலர்களை உற்பத்தி செய்வதிலும் நெதர்லாந்து முதலிடத்தில் இருக்கிறது. இவை அனைத்திலும் நெதர்லாந்து உயர்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியிருக்கிறது.

எனவே விவசாயத்துறை தொடர்பான உயர்கல்வி மற்றும் தொழில்நுட்ப அறிவை இலங்கைக்குப் பெற்றுத்தருமாறு இந்தச் சந்திப்பின்போது விவசாயத்துறை அமைச்சர் நெதர்லாந்து நாட்டின் தூதுவரிடம் கேட்டுக்கொண்டார்.

அவை அனைத்தையும் எவ்வித குறையுமின்றிப் பெற்றுக்கொடுப்பதற்குத் தமது நாடு தயாராக இருப்பதாக இதன்போது தூதுவர் உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய மீனவர் எல்லைப் பிரச்சினை முக்கிய தீர்வு விரைவில் காணப்படும்!

## அமைச்சர் டக்ளஸ் உத்தரவாதம்



இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத மீன்பிடியைத் தடுப்பது தொடர்பில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் மற்றும் புதுடில்லியிலுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சுடன் கலந்துரையாடி விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி செயற்பாடு வடக்கு கிழக்கு மாத்திரமன்றி தென்பகுதியிலும் காணப்படுவதாகவும், இதனைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

மேலும், இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத மீன்பிடி விவகாரம் தொடர்பில் தொலைபேசி ஊடாகவும், கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளுடனும் ஏற்கனவே பல தடவைகள் பேசப்பட்டுள்ளன.

அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் ஒன்லைன் முறையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலும் இதுதொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டது. இடைநிறுத்தப்பட்ட பேச்சுகளைத் தொடர இணக்கம் தெரிவிக்கப்பட்ட போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதற்கு விரைவில் தீர்வு காணும் வகையில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் மற்றும் புதுடில்லியிலுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றுடன் கலந்துரையாடப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.


கடந்த காலத்தில் எல்லைதாண்டிவரும் இந்திய மீனவர்களைத் தடுப்பதற்கு கடற்படையினர் சிறப்பாக செயற்பட்டிருந்தனர். இருந்தபோதும் கொவிட் சூழலால் அவர்களின் நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அத்துமீறல்கள் மீண்டும் அதிகரித்துள்ளன.

கடற்படையினரின் உதவியைப் பெற்றாவது இந்திய மீனவர்களின் வருகையைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் சுட்டிக்காட்டினர். இந்த விடயம் தொடர்பிலும் கவனம் செலுத்துவதாக அமைச்சர் தெரிவித்தார்.

கிரிந்த மற்றும் அம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுகங்களின் அபிவிருத்திப் பணிகளை விரைவில் முன்னெடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் உபுல் கலப்பதி வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அமைச்சு ஏற்கனவே கவனம் செலுத்தியிருப்பதாக இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார். ஒலுவில் துறைமுகம் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இதனை மீன்பிடித் துறைமுகமாக மாற்றுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார். விரைவில் இதற்கான அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்க எதிர்பார்த்திருப்பதாக இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

# காணவில்லை



கரவெட்டி, துன்னாலை தெற்கு, தல்லையப்புலத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை இளையதம்பி (காா்கார இளையதம்பி - 90 வயது) அவர்களை நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகலுக்கு பிறகு காணவில்லை. இறுதியாக அவர் வெள்ளை நிறசேட்டும் சாரமும் அணிந்திருந்தார். இவர் காணாமல் போனமை தொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் மனைவி முறைப்பாடு செய்திருக்கிறார். இவரைக் கண்டால் அல்லது தகவல் ஏதும் தெரிந்தால் 0212056507 அல்லது 0775774852 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## யாழ். பல்கலை வெளிவாரி வணிகமாணி பரீட்சைகள் டிசெம்பர் 05 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.28

யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் வணிகத்தில் மூன்றாம் தேர்வு முதலாம் அரையாண்டு பரீட்சைகளை எதிர்வரும் டிசெம்பர் 05 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 31 ஆம் திகதி முதல் நவம்பர் 15 ஆம் திகதி வரை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டு, நாட்டில் எழுந்துள்ள நிலைமை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகளை நடத்துவது தொடர்பில் இம்மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்ற திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் முகாமைத்துவச் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக இந்தப் பரீட்சைகளை எதிர்வரும் டிசெம்பர் 05 ஆம் திகதி முதல் நடத்துவதற்குத் துணைவேந்தர் அனுமதியளித்துள்ளார்.



## செம்மஞ்சள் நிறத்தில் ஒளிர்ந்த கொழும்பு தாமரைக் கோபுரம்!

'பாலின அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான 16 நாள்கள்' என்ற உலகளாவிய பிரசாரத்தின் முக்கிய அம்சமாக கொழும்பு தாமரைக்கோபுரம் கடந்த புதன்கிழமை செம்மஞ்சள் நிறத்தில் ஒளிரச் செய்யப்பட்டுள்ளது.

நவம்பர் 25 முதல் (பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச நாள்) டிசெம்பர் 10 வரை (மனித உரிமைகள் நாள்) 'பாலின அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான 16 நாள்கள்' என்ற பிரசாரம் உலகளவில் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் உலகிலுள்ள கட்டடங்கள் செம்மஞ்சள் நிறத்தில் ஒளிரவிடப்படுவது வழமையாகும்.

கொவிட் 19 தொற்றுக் காலப்பகுதியில் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பியவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை நிதியத்தின் இலங்கை அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் தெற்காசியாவின் மிகவுயர்ந்த கட்டடமான தாமரை கோபுரம் செம்மஞ்சள் நிறத்தில் ஒளிரச்செய்யப்பட்டு 16 நாள்கள் உலகளாவிய பிரசாரத்தில் இணைந்துள்ளது.

இந்த 16 நாள்களும் உலக நாடுகள், ஐக்கிய நாடுகள் சபையின் முகவரமைப்புகள், சிவில் சமூகங்கள் மற்றும் ஆர்வலர்கள் ஒன்றிணைந்து இந்த உலகளாவிய பிரசாரத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

# மட்டக்களப்பில் விபத்து இருவர் படுகாயமடைவு!





மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சத்துருக்கொண்டான் பகுதியிலேயே நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மரம் ஏற்றுவதற்கு சென்றுகொண்டிருந்த லொறியும் பொருள்கள் ஏற்றிவந்துகொண்டிருந்த கன்டைனர் லொறியும் நேருக்கு நேர் மோதி, மின்சார தூணில் மோதியுள்ளன.

இதன்போது இரண்டு லொறியும் பாரிய சேதமடைந்துள்ளபோதிலும் அதில் பயணித்தவர்களுக்கு உயிர் சேதம் ஏற்படவில்லை. ஆனால் இரண்டு பேர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளுக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில் பல பகுதிகளுக்கான மின்சாரம் வழமை நிலைமைக்கு திரும்பியுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புகைமூட்டத்துடன் கூடிய பனி காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் 300 மெகாவோட் மின்சாரம் பற்றாக்குறை ஏற்படும்

2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் நாடு சுமார் 300 மெகாவோட் மின் பற்றாக்குறையை எதிர்கொள்ளுமென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அவசரகால நிலைமையில் மின்சார பற்றாக்குறை ஏற்பட்டால் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் 100 மெகாவோட் மின்சாரத்தை இலங்கை மின்சார சபை கொள்வனவு செய்யுமென மின்சார சபையின் தலைவர் பொறியியலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு தொடக்கம் நாட்டில் கொவிட் தொற்று காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ள முடக்கத்தின் காரணமாக கொழும்பிலுள்ள பெரும்பாலான தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்களின் செயற்பாடுகள் தடைபட்டுள்ளன. சுமார் மூன்று மாதங்களாக அவை மூடப்பட்டிருப்பதால் மின் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கவில்லை.

அடுத்தாண்டு பெப்ரவரி முதல் வறண்ட காலப்பகுதி ஆரம்பமாவதால் சுமார் 300 மெகாவோட் மின்சாரம் பற்றாக்குறை ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை குறிப்பிட்ட பற்றாக்குறையில் சூரிய மற்றும் காற்றலை மின் உற்பத்தியால் சற்று குறைவு ஏற்படலாம். உறுதியான மின் உற்பத்தி நிலையங்கள் இல்லாமையே இவ்வாறான பற்றாக்குறைக்குக் காரணமாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவசரகால மின் கொள்வனவுக்காக ஏற்கனவே இரண்டு ஒப்பந்தங்களுக்கான அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், தேவையேற்பட்டால் அந்த இரண்டு ஒப்பந்தங்களும் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் கைச்சாத்திடப்படுமென வும் தெரிவித்துள்ளார்.

# பலாலியில் மூடப்படுகிறது சர்வதேச விமான நிலையம்



(ந.லோகதயாளன்)

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதியன்று யாழ்ப்பாண மக்களிற்கு கிட்டிய ஓர் அரும்பெரும் சொத்தான – பலாலியில் அமைக்கப்பட்ட – யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் தற்போதைய அரசினால் இரகசியமான முறையில் முழுமையாக மூடப்படுவது கண்டும் அரசோடு ஒட்டி நிற்போர் வாய்மூடி மௌனிகளாக உள்ளனர் .

இலங்கையின் சர்வதேச விமான நிலையமாக யாழ்ப்பாணம் விமான நிலைய 2019 - 10 - 17 மீண்டும் புதுப் பொலிவுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட பெரும் முயற்சியின் அறுவடை ஒன்று அன்று பெறப்பட்ட மகிழ்ச்சி நிச்சயம் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களிற்கு மட்டுமல்ல வடக்கு மாகாண மக்கள் அனைவருக்கும் ஏற்பட்டது.

**மாவையின் கோரிக்கை**

பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை 2014ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே முன்வைக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா, யாழ்ப்பாணத்துக்கான அப்போதைய இந்தியத் துணைத் தூதுவர் மகாலிங்கத்திடம் முதன் முதலாக இதுபற்றிய கோரிக்கையை முன்வைத்தார்.

இந்தக் கோரிக்கை கவனத்தில் எடுக்கப்படும் என உறுதியளித்த மகாலிங்கம் அந்தக் கோரிக்கையை உரிய முறையில் இந்திய அரசு வரைக் கொண்டு சென்றார். அதன் பின்பு இந்தியப் பிரதமர் வரை இந்த விடயம் கூட்டமைப்பால் கொண்டு செல்லப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

இதனையடுத்து 2015 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இந்திய அரசு இணக்கம் தெரிவித்து அதற்கான உத்தேச செலவு மதிப்பீட்டினையும் மேற்கொண்டது. அச்சமயம் – ஆரம்பத்தில்




அப் பணிகள் யாவும் சத்தம் சந்தடியின்றி இரகசியமாகவே இடம்பெற்றன.

**பச்சைக் கொடியும் பின்னர் எதிர்ப்பும்**

இந்த நிலையில் இரு அரசு தொடர்பு பட்ட பணிகள் என்பதனால் நீண்டகாலம் இரகசியம் காக்க முடிய வில்லை. அதனால் 2015இன் இறுதியில் விடயம் வெளிவந்தது. அப்போதைய மைத்திரி அரசும் ஆரம்பத்தில் பச்சைக்கொடியே காட்டியது. இருப்பினும் இந்த விடயம் கொழும்பு அதிகாரிகள் மட்டத்திற்குச் சென்ற சமயம் பெரும் முட்டுக்கட்டை போடப்பட்டது. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் தெற்கின் பொருளாதாரம் நலிவடைந்து வடக்கின் பொருளாதாரம் மேம்பாடு அடையும் என்ற எண்ணப்பட்டிலேயே தெற்கில் முட்டுக்கட்டை போடப்பட்டதாகக் கருதப்பட்டது. அதனையே தற்போதைய அரசும் எண்ணுகின்றது போலும். அதாவது தெற்கின் பொருளாதார வளர்ச்சி வேகத்தோடு போட்டியாக வடக்கின் பொருளாதாரமும் வளரக்கூடாது என எண்ணுகின்றது.

**கூட்டமைப்பு அழுத்தம்**

2015இன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பினர் இந்தியாவிடம் மட்டுமன்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடமும் விமான நிலைய அபிவிருத்திக்குக் கடும் அழுத்தம் கொடுத்தனர். இதற்கான முன்னெடுப்புகள் மாவை.சேனாதிராசாவால் மட்டுமன்றி எம்.ஏ.சுமந்திரனாலும் முன்கொண்டு செல்லப்பட்டன.

இதனால் இந்திய அரசு பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்புதலை இலங்கை அரசு வழங்கியது.

இதனையடுத்து இந்தியா அதற்கான ஆயத்தப் பணிகளை முன்கொண்டு சென்றது. இவ்வாறு முன்னெடுத்த காலத்தில் யாழில் இருந்த இந்தியத் துணைத் தூதர் நடராஜன் உள்ளிட்ட அதிகாரிகள் பலாலி விமான நிலையத்தை 3 தடவைகள் சென்று பார்வையிட்டனர்.

இதனையடுத்து அபிவிருத்திக்கான பணியை முன்னெடுத்து, இந்தியாவிற்கான விமான சேவையை ஆரம்பிக்க எண்ணி 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி சென்னை விமான நிலையப் பணிப்பாளர் தீபக் சாஸ்திரி தலைமையில் ஒரு குழுவினர் பலாலி விமான நிலையம் வந்து ஆய்வில் ஈடுபட்டனர்.

இப்படி ஆய்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட சமயம் அப்போதைய வடக்கு மாகாண முதலமைச்சர் ஒரு கருத்தினை வெளியிட்டார். அதாவது, விமான நிலைய அபிவிருத்தி என்னும் பெயரில் அப் பகுதி மக்களின் நிலத்தை முழுமையாக இராணுவம் அபகரிக்கும் சாத்தியமே உள்ளது என்றார்.

இருப்பினும் அருகில் உள்ள குறுகிய நிலத்துடன் மட்டும் இந்தியாவிற்கான சேவையே ஆரம்பிக்க முடியும் என தீபக் சாஸ்திரி தலைமையிலான குழு அறிக்கையிட்டது.

**மீண்டும் நெருக்கடி**

இந்த நிலையில் மீண்டும் நெருக்கடி ஏற்பட்டது. அதாவது பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்து, யாழில் இருந்து நேரடி சேவைகளை மேற்கொண்டால் கட்டுநாயக்கா விமான நிலையத்தின் வருமானம் வீழ்ச்சியடைவதோடு அதனை அண்டித் தொழில் புரியும் தெற்கின் வருமானத்திலும் வீழ்ச்சி ஏற்படும் என காரணம் காட்டி பணிக்குத் தடை விதிக்கப்பட்டது. இந்தியா இதற்கான பணியை மேற்கொள்வதனால் முழுமையாக எமது வருமானம் இழக்கும் எனவும் முக்கிய தரப்பினர்தெரிவித்தனர்.

இதனால் குறித்த பணியில் மீண்டும் சிக்கல் ஏற்பட்டது. 2017ஆம் ஆண்டும் நிறைவடைந்து, 2018ஆம் ஆண்டிலும் பணி முன்னெடுக்கும் சாத்தியம் அற்றே காணப்பட்டது. இதனால் இலங்கை சிவில் விமான சேவை அதிகாரிகளை திருப்திப்படுத்த வேண்டிய தேவை பிரதமர் ரணில் தலைமையிலான அரசிற்கு ஏற்பட்டது.

பிரதமர் ரணிலுக்கு ஆட்சியைத் தொடர கூட்டமைப்பு தேவைப்பட்டது. கூட்டமைப்போ பலாலி விமான நிலையம் வந்தே ஆக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது. இதனால் பிரதமர் பலாலி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக மாற்ற வாக்குறுதி வழங்கியமையோடு பணியைத் தொடர அனுமதிக்குமாறு சிவில் விமான நிலையக் கட்டுப்பாட்டு அதிகாரிகளைக் கோரினார்.

**முதலாவது கட்டம் இலங்கை நிதியில்**

இதனையடுத்து இலங்கை சிவில் விமான நிலையக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் இணக்கம் தெரிவித்தாலும் இந்திய அரசின் நிதியில் முன்னெடுத்தால் தமது பிடி தளர்வடையும் எனக் கருதினர்.

இதனால் வேறு வழியின்றி முதல் கட்டமாக இலங்கை அரசின் பணத்திலேயே குறித்த விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாகத் தரம் உயர்த்தும் பணியை (அதாவது தற்போது இடம்பெற்றவை) மேற்கொள்வது எனவும், இரண்டாம் கட்டமாக இடம்பெறும் பாரிய அபிவிருத்திக்கு இந்திய அரசின் உதவியை பெறுவது எனவும் பிரமர் ரணில் இணக்கம் தெரிவித்து அதற்கான ஆணையை வழங்கினார். அந்தளவிற்கு கூட்டமைப்பு ரணிலிற்கு அரசிற்கு தேவைப் பட்டது.

இலங்கையின் 5 ஆவது சர்வதேச விமான நிலையம் என்ற பெயரை யாழ்ப்பாணம் விமான நிலையம் பெற்றுக் கொண்டது.

இதனையடுத்து 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 226 கோடி ரூபா செலவில் முதற்கட்ட அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2019 - 10 - 17 முதல் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையமாக திறந்து வைக்கப்பட்டது.

எனினும் உலகில் கொரோனா தாக்கம் பரவ ஆரம்பித்தபோது இலங்கையிலும் பரவியது. இதனால் கடந்த மார்ச் மாதம் சர்வதேச விமான நிலையங்கள் பூட்டப்படும்போது கட்டுநாயக்காவுடன் பலாலியும் மூடப்பட்டது.

**மூடப்படும் பலாலி**

ஆனால் கட்டுநாயக்கா மெல்ல மெல்ல வழமைக்கு திரும்புகின்றது. யாழ்ப்பாண விமான நிலையமோ மெல்ல மெல்ல முழுமையாகவே கைவிடப்படுகின்றது. யாழ்ப்பாணம் விமான நிலையத் திற்காக நியமனம் செய்யப்பட்ட அனைத்துப் பணியாளர்களும் கடந்த 17 ஆம் திகதியுடன் முழுமையாக மத்தள விமான நிலையத்துடன் இணைக்கப்பட்டுவிட்டனர். இங்கிருந்து பல உபகரணங்களும் கட்டுநாயக்காவிற்கும் மத்தளவிற்கும் நகர்த்தப்படுகின்றன. இதன் மூலம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு நிரந்தர மூடு விழா நடத்தப்படுகின் றது.



இதனை மேலும் உறுதி செய்வது போல் கொரோனாவிற்காக மட்டுமே மூடியிருப்பின், பலாலி விமான நிலையத்தின் 2 ஆம் கட்ட அபிவிருத்திக்காக இந்திய அரசு 300 கோடி ரூபாவை வழங்க தயாராகவே உள்ளது. விமான சேவை இடம்பெறாத காலத்தில் பணியை இலகுவாக ஆரம்பித்து மேற்கொள்ள முடியும். ஆனால் இலங்கை அதிகாரிகளோ இப்பணியை மேற்கொள்ள பின்னடிப்பதன் மூலம் விமான நிலையத்தை நிரந்தரமாக மூட இடம்பெறும் சதி நிரூபணம் ஆகின்றது.

இந்த நேரத்தில் கூட தமிழ் மக்களின் வாக்கில் தேர்வாகி அரசிற்கு ஆதரவளிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனர். ஏனெனில் விமான நிலையத்தை கூட்டமைப்பு முயற்சித்து பெற்றதற்காகவா என்றே எண்ணத் தோன்றுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# பிரிட்டன் நாடாளுமன்றின் மீது கார்த்திகைப் பூவை ஒளிரச்செய்து மாவீரர் நினைவேந்தல் அனுஷ்டிப்பு!

## இலங்கை அரசுக்கு புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் நெத்தியடி



லண்டன், நவம்பர் 27

மாவீரர் நாளை நினைவுகூரும் முகமாக தமிழீழ ஆதரவு புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் பிரிட்டன் நாடாளுமன்றக் கட்டடத்தின் மீது கார்த்திகைப் பூவின் படத்தை ஒளிரச் செய்துள்ளனர்.

ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கெடுக்கும் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு இம்முறை லண்டனில் நடைபெறவில்லை.

கொரோனா வைரஸ் நெருக்கடி காரணமாக இம்முறை மாவீரர் நாள் நிகழ்வுகளை வீடுகளுக்குள்ளும் இணைய ஒன்றுகூடல் வாயிலாகவும் நிகழ்த்தும்படி செயற்பாட்டாளர்கள் அறிவித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே, பிரிட்டன் நாடாளுமன்றக் கட்டடத்தின் மீது கார்த்திகை பூ படத்தை ஒளிவீச்சு மூலம் பதிந்து மாவீரர் நாளை செயற்பாட்டாளர்கள் நினைவு கூர்ந்துள்ளனர்.

நாம் நினைவுகூர்கின்றோம். இலங்கை அரசின் இனப்படுகொலையிலிருந்து விடுதலை பெறுவதற்காகப் போராடிய மாவீரர்களை நினைவுகூர்கின்றோம் என்ற வாக்கியங்களையும் ஆங்கிலத்தில் அவர்கள் ஒளிரவிட்டிருந்தனர்.

பொதுச் சுகாதார நெருக்கடி காரணமாக இன்று பாரிய பொது நிகழ்வுகளை எங்க ளால் நடத்த முடியாது என்பதால், எங்கள் மாவீரர்களை வேறு வடிவத்தில் நினைகூரத்தீர்மானித்தோம்என்று இளம்செயற்பாட்டாளர் ஒருவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

எங்கள் தாயகத்தில் எங்கள் மக்கள் மாவீரர்களை நினைவுகூர்வதை முடக்கு வதற்கு இலங்கை அரசு முயல்கின்றது என மற்றுமொரு செயற்பாட்டாளர் கூறியுள்ளார்.

# முல்லைத்தீவில் திரும்புமிடமெல்லாம் இராணுவத்தினர் தீவிர கண்காணிப்பு





முல்லைத்தீவு, நவ. 27

மாவீரர் நாள் நினைவேந்தலையொட்டி முல்லைத்தீவு நகரில் திரும்பும் இடமெல்லாம் ஆயுதம் தரித்த இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லைத்தீவு கடற்கரை வளாகத்தில் 2009 இற்கு முன்னர் கடற்புலிகளின் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. அதனப்பின்னர் குறித்த வளாகத்தில் கடந்த 5 வருடங்கள் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் பிரமாண்டமாக இடம் பெற்றன

இம்முறை நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவைத் தொடர்ந்து குறித்த இடத்தில் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் நீதிமன்றக் கட்டளையை மீறி நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறவிடாது தடுக்கும் முகமாக அந்தப் பகுதியில் நிலை கொண்டுள்ளனர்

குறித்த பகுதியை விடவும் முல்லைத் தீவு நகருக்குள் திரும்பும் இடமெல்லாம் ஆயுதம் தரித்த இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். வீதியில் ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். இதனால் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

# 1,067 கிலோ மஞ்சள் புத்தளத்தில் மீட்பு!

*புத்தளம், நவம்பர் 27*

*கடற்படையால்புத்தளத்தில்நடத்துப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது 1067 கிலோகிராம் எடையுள்ள உலர்ந்த மஞ்சளுடன் சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*புத்தளம் - மன்னார் வீதியில் உள்ள 02 ஆவது மைல் கல்லில் மேற்கொள்ளப்பட்ட இந்த விசேட நடவடிக்கையின்போது, வடமேற்கு கடற்படை கட்டளைப்பகுதியிலுள்ள உப்பு உற்பத்தி நிலையத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த உலர்ந்த மஞ்சள் கண்டுபிடிக்கப்பட்ட்து.*

*1067 கிலோ எடையுள்ள மஞ்சள் 25 சாக்குகளில் அடைக்கப்பட்டிருந்தன. இதற்கிடையில், இந்தச்சம்பவம் தொடர்பாக ரகுமான் நகரில் 04ஆவது மைல் போஸ்டில் இருந்து ஒரு சந்தேகநபரும் கடற்படையால் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரையும் மற்றும் உலர்ந்த மஞ்சளையும் சட்ட நடவடிக்கைகளுக்காகப்புத்தளம் பொலிஸார் பொறுப்பேற்றனர்.*

# இரணைப்பாலை துயிலும் இல்லம் இராணுவத்தினர் முற்றுகைக்குள்!



முல்லைத்தீவு, நவ.27

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தில் கடந்த வருடங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் மிகவும் பிரமாண்டமாக இடம் பெற்றன.

இம்முறை நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவைத் தொடர்ந்து குறித்த இடத்தில் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் நீதிமன்றக் கட்டளையைமீறி நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறவிடாது தடுக்கும் முகமாக குறித்த பகுதியில் நிலைகொண்டுள்ளனர்.

குறித்த பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் நிலைகொண்டுள்ள விட யத்தை ஊடகங்கள் ஒளிப்பதிவு செய்யவும் அவர்கள் அனுமதி மறுத்து வருகின்றனர்.

# வடக்கிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அச்சமின்றி சிகிச்சை பெற வர முடியும்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 27

வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளுக்குப் பொதுமக்கள் அச்சமின்றி சிகிச்சைக்கு வர முடியும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அண்மையில் கிளிநொச்சியில் கொரோனா வைரஸ் தொற்றுடன் இனங்காணப்பட்ட வயோதிபர் ஒருவர், கடும் காய்ச்சலுடன் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்படும் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கையுடனேயே சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு இருந்தார்.

இருப்பினும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவரோடு நேரடித் தொடர்பில் இருந்த மூன்று மருத்துவப் பணியாளர்கள் தனிமைப்படுத்தலுக்கும், மேலும் 7 மருத்துவப் பணியாளர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளார்கள். அவருடன் நேரடியாகத் தொடர்புடைய உறவினர்களும் நோயாளர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

எனவே, வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் பொதுமக்கள் அச்சமின்றி சிகிச்சைக்கு வரமுடியும் - என்றார்.

# போதைப்பொருள் கடத்தலுக்கு கடற்படையினர்தான் பொறுப்பு

## சபையில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.27

மீனவர்களின் செயற்பாடுகளில் கடும் கெடு பிடிகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்து கடற்படையினர் செயற்படும் நிலையில், போதைப்பொருள்களும் மஞ்சளும் எவ்வாறு தடைகளின்றி கடத்தப்படுகின் றன?

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சபையில் இன்று கேள்வி எழுப்பினார்.

2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கடற்தொழில், பெருந் தோட்டத்துறை மற்றும் காணி அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்றது. இந்த விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னி மாவட்டத்தில் தென்னிலங்கை மீனவர்களின் ஆக்கிரமிப்பு மற்றும் இந் திய மீனவர்களின் ஆக்கிரமிப்புகள் அதிகரித்துள்ளன. இதற்குத் தீர்வு காணுமாறு தொடர்ச்சியாகக் கூறி வந்தாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்து கவனம் செலுத்துவதில்லை.

மேலும் மீனவர்கள் கடலுக்குச் செல்லும்போது அனுமதிப் பத்திரங்கள் கேட்கப்படுவதுடன், கடுமையான சோதனைகளுக்கும் உட்படுத்தப்படுகின்றனர். இந்த நிலையில் போதைப் பொருள்களும் மஞ்சளும் எப்படி எந்தவித தடையுமின்றி கடத்தப்படுகின்றன? இதற்குக் கடற்படையி னரே பொறுப்புக் கூற வேண்டியவர்கள்.

எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை வேறு நபர்கள் பயன்படுத்துவதன் காரணமாகவே நாட்டில் மஞ்சள், போதைப் பொருள் கடத்தல் அதிகரிக்கின்றன. இதனைத் தடுக்க வேண்டுமென்றால் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய நடவடிக்கையெடுக்க வேண்டும். - என்றார்.

# தமிழ் மக்களும் எமது மக்களே ஆவர் கடந்த காலத்தை மறந்து இணையுங்கள்!

## அமைச்சர் சமல் ராஜபக்ஷ சபையில் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 28

இந்த நாட்டில் ஓர் இனத்திற்கு மாத்திரம் முன்னுரிமை கொடுக்கவில்லை, தமிழ் மக்களும் எமது மக்களே, அவர்களுக்கான சகல உதவிகளையும் பெற்றுக் கொடுக்கவே நினைக்கின்றோம். கடந்த காலத்தை மறந்துவிட்டு தமிழர்கள் எம்முடன் ஒன்றிணையுங்கள் என அமைச்சர் சமல் ராஜபக்ஷ சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை கமத்தொழில், நீர்ப்பாசன அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

உலகில் 200 கோடி மக்கள் அதியுச்ச நீர் தட்டுப்பாட்டுடன் வாழ்ந்து வருகின்றனர். உலகில் ஏற்பட்டு வருகின்ற அனர்த்தங்கள் காரணமாக 2030 ஆம் ஆண்டில் 70 கோடி மக்கள் அகதிகளாவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கும் இந்த அச்சுறுத்தல் உள்ளது. உலக வெப்பமாதல் நிலைமைகளுக்கு நாமும் முகங்கொடுத்து வருகின்றோம். இதில் உலகிலுள்ள 180 நாடுகளில் அதிக அச்சுறுத்தல் கொண்ட பத்து நாடுகளில் இலங்கையும் உள்ளது.

2020 ஆம் ஆண்டில் உலகில் எச்சரிக்கையான காலநிலை கொண்ட நாடுகளின் பட்டியலில் 6 ஆவது இடத்தில் இலங்கை உள்ளது. இலங்கையில் நீர் நிலைகளைப் பாதுகாத்து அதன் மூலமாக குடிதண்ணீர் பாதுகாப்பை முன்னெடுக்க நாம் தவறி வருகின்றோம் என்பதைக் கூறியாக வேண்டும்.

அதுமட்டுமல்ல இன்று உலகளவில் பரவிக்கொண்டுள்ள கொவிட் - 19 வைரஸ் காரணமாக முறையான உணவுகள் கிடைக்காது உலகில் 13 கோடியே 50 லட்சம் மக்கள் தவித்து வருகின்றனர் என உலக உணவு ஸ்தாபனம் தெரிவிக்கின்றது. இதில் உணவு உற்பத்தியில் நெருக்கடிகளை சந்திக்கும் அபாயமுள்ள நாடுகளில் இலங்கையும் உள்ளதாக உலக உணவு ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

எனவே இப்போதே நாம் தேசிய உணவு உற்பத்திகளில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இல்லையேல் இலங்கையில் 25 வீதமானவர்கள் உரிய உணவு பற்றாகுறைக்கு முகங்கொடுக்க வேண்டிவரும், அதாவது இலங்கையின் சனத்தொகையில் 4 கோடியே 70 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்படுவர் என எச்சரிக்கப்படுகின்றது.

எனவே எமது அரசு நாட்டின் தேசிய உற்பத்தியில் விவசாயத்தை ஊக்குவிக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. 16 வகையான விதைகளை நாம் குறைந்த விலைகளில் விவசாயிகளுக்குக் கொடுத்து சிறு உற்பத்திகள் மற்றும் அத்தியாவசிய தேவைகளை நாமே பூர்த்தி செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். அத்துடன் நெல் உற்பத்தியை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

குடிதண்ணீர் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகளை முன்னெடுத்தாக வேண்டும். வறண்ட பகுதிகளில் மக்கள் அதிகளவில் குடிதண்ணீர் இல்லாது நோய்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். வடக்கு மாகாணம் அதிக அச்சுறுத்தலில் உள்ளதென்பதையும் கருத்தில் கொண்டே மன்னார், வடமாராச்சி நீர் திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

மகாவலி எல் வலயம் உருவாக்கப்பட்டுள்ளமை சகல மக்களுக்குமான பயன்களை பெற்றுக்கொள்ளவே தவிர எந்தவோர் இனத்தையும் தண்டிக்கவோ நிராகரிக்கவோ அல்ல. சகல மக்களுக்கும் ஒரே மாதிரியான சலுகளைப் பெற்றுக் கொடுக்க நினைக்கிறோம்.

தமிழர்களும் எமது மக்கள். சகல மக்களுக்கும் இடங்களை பெற்றுக்கொடுப்போம். இதில் ஓர் இனத்திற்கு மட்டும் முன்னுரிமை அல்ல. அவ்வாறு நடந்தவற்றை மறந்து எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்போம். யாழ்பாண மக்கள் மிகவும் அதிகமான கஷ்டபடுகின்றனர். அவர்களின் பொருளாதாரதையும் முன்னேற்ற நாம் அனைவரும் ஒன்றினைவோம். – என்றார்.

சபையில் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சார்ள்ஸ் நிர்மலநாதன்:- அமைச்சர் அவர்களே, மகாவலி எல் வலயம் உருவாக்கப்பட்டு இன்று 32 ஆண்டுகளாகின்றது, இன்றுவரை மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் தமிழ் மக்களுக்கு ஒரு துண்டு நிலமேனும் கொடுக்கவில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் சமல் ராஜபக்ஷ:- இவற்றை மறந்து முன்னோக்கி பயணிப்போம், அனைவரும் ஒன்றினைவோம். – என்றார்.

# இலங்கைக்கு எதிரான பிரேரணை மார்ச் மாதம் ஐ.நா.வில் வருகிறது!

## ஞாபகப்படுத்தினார் கிரியெல்ல

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் போர்குற்ற உள்ளக விசாரணை பிரேரணையில் இருந்து இலங்கை நீங்கியதால் அடுத்த மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக பிரேரணை ஒன்றை நிறைவேற்றவுள்ளதாக பிரித்தானிய நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், அரசாங்கத்தின் நகர்வுகள் இலங்கைக்கு பாரிய நெருக்கடியை உருவாக்கப்போகின்றன எனவும் எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல சபையில் மீண்டும் எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கமத்தொழில், நீர்ப்பாசன அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

சபையில் வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் சில காரணிகளைக் குறிப்பிட்டேன். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ ஐ.நா. செயலருடன் இணங்கிய வாக்குறுதிகள் தொடர்பாகத் தெரிவித்தேன். இதில் உள்ளக விசாரணைக்கு அவர் இணங்கினார். ஆனால் ராஜபக்ஷ அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இந்நிலையில் எமது ஆட்சியில் நாம் உள்ளக விசாரணைக்கு இணக்கம் தெரிவித்தோம். எனினும் இப்போது மீண்டும் இந்த அரசாங்கம் பிரேரணையில் இருந்து விலகுவதாகத் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. அது என்னவென்றால் நாம் போர்குற்ற உள்ளக விசாரணை பிரேரணையில் இருந்து நீங்கியதால் அடுத்த மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக பிரேரணை ஒன்றை நிறைவேற்றவுள்ளதாக அவர்கள் தீர்மானம் எடுத்துள்ளனர். எமக்கு எதிராக பிரேரணை ஒன்று வருகின்றதென்றால்



அது மிக பாரதூரமான விடயமாகும். 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலைமை என்ன என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் எமக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

2015 ஆம் ஆண்டில் நாம் பொருளாதாரத் தடையை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தோம். இந்த பொருளாதாரத் தடைகளுக்கு முகங்கொடுக்க முடியாத காரணத்தால் தான் 2015 ஆம் ஆண்டு தேர்தலுக்கு மஹிந்த ராஜபக்ஷ சென்றார். எனவே இப்போதுள்ள நிலையில் நாட்டைக் கருத்தில் கொண்டு தீர்மானம் எடுக்க வேண்டும் என அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன். – என்றார்.

# வீதிப் போக்குவரத்திலும் எச்சரிக்கை அவசியம்!

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

வீதி விபத்துக்களின் குற்றவாளியாக தாம் பெயர் பெறக்கூடாது என்ற எண்ணத்திலேயே சாரதிகள், பயணிகள் மற்றும் பாதசாரதிகள் எப்போதும் செயற்பட வேண்டும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டின் சில பகுதிகள் முடக்கப்பட்டிருந்தமையால், வீதி விபத்துகள் ஓரளவு குறைவடைந்திருந்தன. எனினும் தற்போது இந்த விபத்துகள் அதிகரித்து வருகின்றமை அவதானிக்க கூடியதாக இருக்கிறது. அதற்கமைய கடந்த வியாழக்



கிழமை இடம் பெற்ற இரு வாகன விபத்துகளில் இருவர் உயிரிழந்துள்ளமையுடன், மேலும் பலர் காயமடைந்திருந்தனர்.

பெரும்பாலான வாகன விபத்துகள் சாரதி மற்றும் பாதசாரதிகளின் கவனக்குறைவின் காரணமாகவே இடம்பெறுகின்றன. இதனால் எப்போதும் தாம் வாகன விபத்துகளுக்குக் காரணமாக இருக்க கூடாது என்ற எண்ணத்திலேயே வாகன சாரதிகள், பயணிகள் மற்றும் பாதசாரதிகள் செயற்பட வேண்டும்.

வருடத்திற்கு வாகனவிபத்துக்களால் எமது நாட்டில் 3 ஆயிரம் பேர் வரை உயிரிழக்கின்றமையுடன், 20 ஆயிரம் பேர் வரையில் காயமடைவர். இதனால் இவ்வாறான உயிரிழப்புகளைத் தவிர்ப்பதற்காக நாம் எப்போதும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். மழைக் காலங்களின் போதும் மிகுந்த கவனத்துடன் வாகனத்தை செலுத்த வேண்டும். – என்றார்.

# ஷானி அபயசேகரவின் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு வேண்டுகோள்!

## விடுத்தது மனித உரிமைகள் ஆணைக்குழு

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் உயிர்ப்பாதுகாப்பை உறுதிசெய்ய, போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியுள்ளது.

சிறைச்சாலைகள் ஆணையாளர் துசார உபுல்தெனியவுக்கு அந்த ஆணைக்குழு விசேட கடிதம் ஒன்றை அனுப்பி இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஷானி அபேசேகரவுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளிப்பட்ட நிலையில், அதனை மையப்படுத்தி அவரது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாகப் பல முறைப்பாடுகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு கிடைத்தன எனவும், அதனை மையப்படுத்தியே, அவரது பாதுகாப்பை உறுதி செய்ய இந்தப் பரிந்துரைகளை அனுப்புவதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஷானி அபேசேகர விவகாரத்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உன்னிப்பாக அவதானிக்கும் நிலையில், அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பின் உடனடியாக அருகில் உள்ள வைத்திய சாலையில் அவரை சேர்த்து சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியுள்ளது.

1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் ஊடாக கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்துக்கு அமைய இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நேற்று மாவீரர்களை நினைவேந்தல் செய்த பிரமுகர்கள்


நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் எம்.பி.


தமிழரசு தலைவர் மாவை சேனாதிராசா


சட்டத்தரணி வீ.மணிவண்ணன்


விந்தன் கனகரத்தினம்


செல்வராசா கஜேந்திரன் எம்.பி. (மட்டக்களப்பில்)


எம்.கே.சிவாஜிலிங்கம்


சிவஞானம் சிறிதரன் எம்.பி. இல்லத்தில்....


கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.


சமத்துவக் கட்சி அலுவலகத்தில் ....


சி.வி.கே.சிவஞானம்


மட்டக்களப்பில் அரியநேத்திரன்


தியாகராஜா நிரோஷன் (பி.சபைத் தவிசாளர்)

# காணி அபகரிக்கும் நபர்களை கைதுசெய்ய விசேட பிரிவு!

## பாதுகாப்புச் செயலாளர்

காணி அபகரிப்புடன் சம்பந்தப்பட்ட நபர்களைக் கைது செய்ய விசேட பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் எமது எதிர்கால சந்ததியினருக்காக வளங்களை நாம் பாதுகாக்க வேண்டுமெனவும் பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

நாரஹென்பிட்டியவில் உள்ள உள்நாட்டு பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மாவட்ட செயலாளர் மற்றும் அரசாங்க அதிபர்களுடனான சந்திப்பின் போது உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்–

சட்டவிரோத காடழிப்பு பெருமளவில் பரவலாக இடம்பெற்று வருகின்றமை தொடர்பாகக் கவலை வெளியிட்ட பாதுகாப்பு செயலாளர், இவ்வாறான முயற்சிகள் இடம்பெறுவதற்கு முன்னரே அவற்றை அடையாளங் கண்டு காடழிப்பு இடம்பெறுவதைத் தடுத்து நிறுத்துவது தொடர்பில் அதிக கவனம் செலுத்துவது அவசியம் எனத் தெரிவித்தார்.

இது போன்ற முயற்சிகளைத் தடுக்க முப்படையினரும் பொலிஸாரும் விழிப்புடன் செயற்படுமாறு ஜனாதிபதி பணித்துள்ள அதேவேளை விமானப்படை தமது வளங்களைப் பயன்படுத்தி வான்வழி கண்காணிப்புக்களை மேற்கொள்ளுமாறும் பணித்துள்ளார் என அவர் தெரிவித்தார்.

எமது எதிர்கால சந்ததியினருக்காக வளங்களை நாம் பாதுகாக்க வேண்டுமெனவும் வன வளங்கள் அழிக்கப்படுவது தொடர்பில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் அரச அதிபர்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் எனவும் இயற்கை வளங்கள் அழிவடைந்து செல்வதற்கு எதிராகச் செயற்படவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அண்மையில் இடம்பெற்ற காணி அபகரிப்பு சம்பவங்கள் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட பாதுகாப்புச் செயலாளர், காணி அபகரிப்புடன் சம்பந்தப்பட்ட நபர்களை கைது செய்ய விஷேட பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

# அனைத்து மக்கள் பாதுகாப்பையும் நான் நிச்சயம் உறுதிசெய்வேன்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உத்தரவாதம்



நாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் பாதுகாப்பையும் நிச்சயம் உறுதி செய்வேன் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் கலாநிதி சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை), பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக சரத் வீரசேகர சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

அதனைத் தொடர்ந்து சமய நிகழ்வுகளில் கலந்து கொண்ட அவர், பௌத்த சமயத் தலைவர்கள் முன்னிலையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சர் கலாநிதி சரத் வீரசேகர மேலும் கூறியுள்ளவை வருமாறு –

நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களையும் பாதுகாப்பதே தற்போதேய முக்கிய கடமையாக இருக்கின்றது.

அந்தவகையில் எனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பின் ஊடாக பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் நன்மை ஆகியவற்றுக்கே முக்கியத்துவம் கொடுத்து செயற்படுவேன். இந்தப் பொறுப்பு எனக்காக அல்ல, பொதுமக்களுக்காக எனக்கு வழங்கப்பட்டுள்ளதாகும்.

ஆகவே, இந்த சேவையின் ஊடாக இலங்கை வாழ் சகல மக்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்து, அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வேன். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# காயமுற்றோருக்கு உதவப் போய் உபத்திரவத்தை வாங்கியவர்கள்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.27

வெளிநாடுகளில் இருந்து விமான நிலையம் ஊடாக வருபவர்களைத் தனிமைப்படுத்தும் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லும் வாகனங்களில் அது தொடர்பில் எந்தவொரு அடையாளமும் இல்லாத காரணத்தால், மனிதாபிமான அடிப்படையில் உதவச் சென்ற பலரும் தனிமைப்படுத்தலிற்கு உட்படும் அவலம் ஏற்பட்டுள்ளது.

பளைப் பகுதியில் ஓர் விபத்து இடம்பெற்றதான தகவல் பளை வைத்தியசாலைக்கு சென்றுள்ளது. சுமார் 20 பேர் வரையில் விபத்திற்கு உள்ளாகினர் எனத் தகவல் கிடைத்தமையில் பல வாகனங்களுடன் தாதியர்கள, உதவியாளர்கள் எனப் பலரும் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

அவ்வாறு சென்றவர்கள் விபத்திற்கு உள்ளானவர்களிற்கு விரைந்து உதவி அளித்து வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இவ்வாறு வைத்தியசாலைக்கு அனுப்பியதோடு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிக்கும் தகவல் வழங்கினர். அச்சமயம் அனுமதிக்கப்பட்டவர்களின் உடை, நடை, பாவனையில் வித்தியாசம் கண்ட தாதிய உத்தியோகத்தர் ஒருவர் அவர்களது பெயர், ஊர் தொடர்பில் வினாவியுள்ளார்.

இதன்போதே விபத்தில் படுகாயமடைந்த அனைவரும் வெளிநாடுகளில் இருந்து விமான நிலையம் ஊடாக வந்து தனிமைப்படுத்தலுக்காக கொண்டு வரப்பட்டவர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

இதனால் சம்பவத்தில் உதவிய தாதியர் , படையினர், நேரில் சென்று செய்தி சேகரித்த செய்தியாளர் என பலர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படும் சூழல் ஏற்படுவதாக அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இனி வரும் நாள்களில் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு ஆள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களின் முன்னால் தனியான குறியீட்டு அடையாளம் போடப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கின்றனர்.

இதேநேரம் மேற்படி விபத்தில் படுகாயமடைந்த 18 பேரில் 14 பேர் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளமையும் குறப்பிடத்தக்கது.



# நாவற்குழியில் நேற்று இடம்பெற்ற 1,000 பனம்விதை நடுகை நிகழ்வு






யாழ்ப்பாணம்,நவ.28

மரம்நடுகை மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கார்த்திகை மாதத்தில் பல்வேறு பகுதிகளிலும் மரநடுகை செயற்திட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில் 'நாவற்குழி நகரிற்கு 1000 பனைகள்' எனும் செயற்திட்டம் நேற்றையதினம் 'நெய்தல் கடற்கரை நகரில்' இடம்பெற்றது.

கற்பகவனம், காலைக்கதிர் குழுமத் தலைவர் சி.அனுராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்க முகாமையாளர் திரு.கோபால கிருஷ்ணன் கலந்துகொண்டு பனம் விதைகளை நடும் செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. பனையின் பயன்கள் மற்றும் எமது வாழ்வியல், பொருண்மியம் ஆகியவற்றுடன் பனை இணைந்திருப் பது பற்றி விளக்கப்பட்ட இந்த நிகழ்வில் இயற்கை ஆர்வலர்கள் மற்றும் ஊர் மக்கள் கலந்துகொண்டனர்.

## கிளிநொச்சி, காரைநகரைச் சேர்ந்த இருவருக்கு கொரோனாத் தொற்று

யாழ். பல்கலைக்கழக கொரோனா பரிசோதனைக் கூடத்தில் நேற்று இடம்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை முதற்கட்ட தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி 155ஆம் கட்டைப் பகுதி தண்ணீர் விநியோக கடையின் வாகனச் சாரதி ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, கொழும்பிலிருந்து காரைநகர் திரும்பியிருந்த காரைநகரைச் சேர்ந்த நபர் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## நேற்றுக் காலை முதல் வழமைக்குத் திரும்பின யாழ். பதிவாளர் திணைக்களச் செயற்பாடுகள்

யாழ்ப்பாணம் மாவட்ட பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் செயற்பாடுகள் நேற்றுக் காலையிலிருந்து வழமைக்குத் திரும்பியுள்ளன.

இந்தத் தகவலை யாழ். மாவட்ட பதிவாளர் நாயகம் க.நடராஜா அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டபதிவாளர் நாயகம் திணைக்களத்தில் இரண்டு நாள்களுக்குப் பொதுமக்களுக்கான சேவை இடம்பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டிருந்தநிலையில், பதிவாளர் திணைக்கள அலுவலக ஊழியர்கள், மாவட்ட செயலகஉத்தியோகத்தர்கள் இணைந்து நேற்றுமுன்தினம் முழுநாளும் செயற்பட்டதன் காரணமாக நேற்றிலிருந்து பொதுமக்களுக்கான சேவை வழமை போல் இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடும் மழையின் தாக்கத்தால் யாழ். மாவட்ட செயலகத்தில் இயங்கும் பதிவாளர் நாயகம் திணைக்கள அலுவலகம் பாதிக்கப்பட்டிருந்தது. நான்கு மாடிகளைக் கொண்ட குறித்த அலுவலகக் கட்டடத்துக்குள் மழை நீர் உட்புகுந்ததால் அலுவலகம் முழுவதும் வெள்ளத்தால் மூழ்கியிருந்தது.

வெள்ளம் உட்புகுந்த குறித்த அலுவலகத்தை யாழ். மாவட்ட அரச அதிபர், மாவட்ட மேலதிக அரச அதிபர், அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ஆகியோர் பார்வையிட்டிருந்தனர்.







8 வகையான 4 சிசிடிவி கமராக்களைக் கொண்ட முழுமையான தொகுப்பு







2015இல் இருந்து கிக்விசன் கமராக்களை வடக்கில் தனித்துவமாக அறிமுகப்படுத்தி இன்றுவரை கமராக்களை தரமாக நிறுவுவதிலும் அவற்றை தொடர்ந்து பராமரிப்பதிலும் முன்னணியில் இருக்கின்றோம்

SST சன்சக்தி ரேடர்ஸ்

# 395, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
www.sunsakthy.com info@sunsakthy.com
www.facebook.com/ sst.sunsakthy
021 221 7994
077 552 7099
077 728 4196

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனாவுக்குப் பின்னரான உலகம்
# இயற்கைக்கான தருணம்

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை 1-30, 2020



**ஆளுக்கொரு மரம் நடுவோம்**
**நாளுக்கொரு வரம் பெறுவோம்**

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

விளம்பர அனுசரணை:- காலைக்கதிர் Kalaikkathir